
கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
மாதம் இருமுறை
10-6-1973
50 காசு



உங்கள்
மகனின்
கனவை
நனவாக்குங்கள்




உங்கள் மகன் பெரியவனானதும் எந்தத் தொழில் செய்யப்போகிறான்? என்ஜினியரா? கட்டடக்கலைஞரா? டாக்டரா? வக்கீலா? எதுவானாலும் சரி அதற்கு ஏராளமாகப் பணம் தேவை. அவனது எதிர்காலத்திற்கென்று பணம் சேமித்து வருகிறீர்களா? யூகோ பாங்கில் சேமித்து வாருங்கள்: உங்கள் பணம் பெருகிக் கொண்டே போகும்.

யூகோ பாங்க்
வளம் பெற வழி
வகுத்தளிக்கின்றது

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்


UCO-3/71

தலைமை அலுவலகம் : கல்கத்தா



கோகுலம்

ஜூன் 10, 1973



மலர் 2 :: இதழ் 5

பிரமாதீச, வைகாசி 28

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்
— பாரதியார்

சந்தா விவரம் :

ஒரு வருடம்	ரூ.	7–00
ஆறு மாதம்	ரூ.	3–50

நிர்வாகி,
கோகுலம்
கல்கிப் பூங்கா,
சென்னை - 600031



அட்டைப்பட மான் குட்டி :


நான் மாரீசன் இல்லே
நிஜ மான் குட்டியாக்கும்!

வண்ணப்படம் :
ஹரிகோபால்



கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்தவாரியார்



அடியார்க்கு அருள் புரியும் அண்ணலாகிய கண்ணபிரான் கோகுலத்தில், தம்மையே நினைந்து நினைந்து உள்ளம் உருகும் நந்தகோபர், யசோதை, கோபிகையர் ஆகியோருக்கு ஆறுதல் உரை கூற வேண்டும் என்று திருவுளம் பற்றினார்.

யாதவர்களுள் சிறந்தவரும், வியாழ பகவானுடைய சீடரும், அறிஞரும், அமைச்சரும், தமது அந்தரங்கத் தோழரும் ஆகிய உத்தவரை அழைத்து, அவருடைய கரத்தைப் பற்றிக் கொண்டு கூறுகின்றார்:

''உத்தவரே! நீர் கோகுலம் சென்று என்னையே நினைத்து உருகும். நந்தகோபர், யசோதை, உத்தம குணம் பொருந்திய கோபிகையர்கள் ஆகிய இவர்களைப் பார்த்து, எனது நலத்தைக் கூறும். சில தினங்களில் நான் அங்கு வந்து சந்திப்பேன் என்றும் கூறும்'' என்று கட்டளையிட்டார்.

உத்தவர், அண்ணலின் ஆணையைச் சிரமேல் தாங்கி, அஞ்சலி செய்து, சிறந்த தேரில் ஏறி, கோகுலத்தை நாடிப் புறப்பட்டார்.

கண்ணபிரானுடைய கழலடியைக் கருதிய வண்ணம் கோகுலத்தை அடைந்தார். நந்தகோபர் அவரை அன்புடன் வரவேற்று, கால் அலம்ப நீர், கையலம்ப நீர் தந்து, இனிய உணவுகள் தந்து உபசரித்தார். ''உத்தவரே! உமக்கு வணக்கம். நற்குண சீலராகிய வசுதேவர் தமது புதல்வருடன் கூடி மகிழ்ச்சியாக இருக்கின்றாரா? கண்ணபிரான் எங்களையும் இந்தக் கோகுலத்தையும் கோபாலர்களையும் கோபிகையர்களையும், பிருந்தாவனத்தையும் எப்போதாவது நினைக்கிறாரா? இன்னும் ஒருமுறை இங்கு வருவாரா? நாங்கள் அப் பரந்தாமனைப் பார்க்கும் பாக்கியம் கிடைக்குமா? நாங்கள் எங்கள் உள்ளத்தில் கண்ணபிரானை நினைந்து நினைந்து பிரிவுத் துயரால் பெரிதும் வாடுகிறோம். பதினாயிரம் யானை பலமுடைய கம்சனையும், மாமல்லர்களையும் குவலயாபீடம் என்ற யானையையும் பல அரக்கர்களையும், கம்சன் பூசித்த

வில்லையும் அழிந்த அவருடைய பெருமை அளவிடற் கரியது. பரம் பொருளே கண்ணனாக வந்து அவ தரித்தது என்று ஆன்றோர்கள் கூறி யுள்ளார்கள். அவர் எங்கே? அற்பர் களாகிய நாங்கள் எங்கே? இனி அப் பரந்தாமனைக் காண்போமோ?'' என்று கூறித் தேம்பித் தேம்பி அழுதார். அங் குள்ள அனைவரும் விம்மி விம்மி அழு தார்கள். யசோதை முகமெல்லாம் கண்ணீர் மல்க அழுதாள்.

கோபிகையர்கள், ''உத்தவரே! கண்ணபிரான் எங்களை மறந்து விட் டாரா? எங்கள் பாசத்தைத் துறந்து விட்டாரா? வேதங்களும் காணாத பாதங்களை எம்மிடம் தந்து எளிதாக எம்முடன் கலந்து விளையாடினார். இப்போது அத்தனையும் துறந்துவிட் டார் போலும்! நாங்கள் என்ன பாபம் செய்தோமோ? தாயைப் பிரிந்த சேய் களைப் போலும், பசுவைப் பிரிந்த கன்றைப் போலவும், உயிரைப் பிரிந்த உடம்பைப் போலவும், பகவானைப் பிரிந்து நாங்கள் நடைப்பிணமாக உலவு கிறோம். எங்கள் இதயம் இரும் பால் ஆனது போலும்; இன்னும் வெடித்து விடாமல் இருக்கின்றது. இனி எங்களுக்கு என்ன வாழ்வு?'' என்று கூறிக் கண்ணீர் ஆறாகப் பெருக அழுது நின்றார்கள்.

உத்தவர் அவர்களைப் பார்த்து ஆறுதல் கூறுகின்றார். ''நந்தகோபரே! நல்லறிவுபடைத்த யசோதையே! குணம் மிகுந்த கோபிகையர்களே! நீங்கள் சஞ்சலமடைய வேண்டாம். மனத்தைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள். வேதங்க ளுக்கும் தேவர்களுக்கும் எட்டாத எம் பெருமானை வளர்க்கின்ற பெரும் பேறு நீங்கள் பெற்றீர்கள். அப்பரமாத்மா யாண்டும் நீக்கமற நிறைந்திருக்கின்றார். அவர் உங்கள் அன்புக்கு எளியராயிருக் கின்றார். அவர் உங்கள் உள்ளத்திலும் கண்ணிலும் கலந்திருக்கின்றார். அவரை நீங்கள் பிரியவில்லை. விரைவில் இங்கு வருவார், காட்சி தருவார். அவரு டைய உள்ளம் சதா உங்களை நினைத்து அருள் புரிகின்றது. வருந்தாதீர்கள்'' என்று கூறித் தேற்றினார்.

சில தினங்கள் கோகுலத்தில் தங்கி அவர்களை மகிழ்வித்தார். பின்னர் அவர்களிடம் பிரியாவிடை பெற்று அவர்கள் அன்புடன் தந்த காணிக்கை களை மறுக்காமல் பெற்றுக் கொண்டு திரும்பினார். மதுரை சேர்ந்து பல ராமரையும் கிருஷ்ணரையும் வணங்கிக் காணிக்கைப் பொருள்களை வழங்கி, நந்த கோபர், யசோதை, கோபிகா ஜனங் களின் அன்பு நிலையை விளக்கிக் கூறினார்.

கூனிக்கு அருள் புரிந்தார்

மதுசூதனராகிய மணிவண்ணன்முன் மதுரைக்கு வந்தபோது தமக்குப் பரி மளப் பொருள்களைத் தந்த கூனியைத் தமது கர மலரால் தொட்டு அழகிய வடிவை வழங்கி அருளினார். அந்தப் பெண்மணிக்கு முன்பு வாக்களித்தபடி உத்தவரை அழைத்துக் கொண்டு அவள் இல்லத்தை அடைந்தார்.

'எம்பெருமான் வருவாரோ, வரமாட் டாரோ?' என்றுஎண்ணி எண்ணி ஏங்கிய வளாய், கண்ணனுடைய புகழ் நிறைந்த கீதங்களைப் பாடிக் கொண்டிருந்தாள். மணிவண்ணனைக் கண்டதும் அவள் திடுக் கிட்டு எழுந்தாள். மழையைக் கண்ட சகோரப் பறவை போல் மகிழ்ந்தாள். ஆனந்தக் கண்ணீர் வடித்தாள். அவ ருடைய திருவடிகளைத் தொழுதாள். அழு தாள். ஆனந்த பரவசமானாள். எம் பெருமான் அவள் விரும்பியபடி சில தினங்கள் அவளுடன் தங்கினார். அவளுக் குப் பூரணமாய் அருள் புரிந்தபின் தமது திருமாளிகைக்கு எழுந்தருளினார்.



தவளை


தத்தித் தத்தி நீரிலே
தாவு கின்ற தவளையார்
கத்திக் கத்தி இரவிலே
காதை எல்லாம் துளைக்கிறார் !

குளத்தில் உள்ள நீரிலே
குடி இருக்கும் தவளையார்
பளபளப்பு இன்றியே
பாசம் பிடித்துத் திரிகிறார் !

சின்னச் சின்னப் பூச்சிகள்
தேடு கின்ற தவளையார்
சொன்ன பாட்டைச் சொல்லியே
தரக்தரக் என்கிறார் !

—அழகனார்





விஞ்ஞானம்

எங்கோ யாரோ பாடுவதை
இங்கே நீயும் கேட்கின்றாய் !
பொங்கிச் சிரித்து யார்யாரோ
பேசி மகிழ்தல் காண்கின்றாய் !

நிலவில் மனிதன் காலூன்றி
நடந்த காட்சி கண்டார்கள் !
உலகின் மூலை எங்கேயோ !
உருளும் நிலவும் எங்கேயோ !

இன்னுஞ் சிலநாள் போனாலோ
எல்லா உலகும் நம்முன்னே
சின்னத் திரையில் 'டெலிவிஷனில்'
சிறப்பாய்த் தோன்றும் நிஜமேதான் !

சின்னப் பெட்டி வானொலியைச்
சிறையாய்ப் பிடித்த விஞ்ஞானம்
கண்ணைக் கட்டும் வித்தையில்லை !
கற்றத நல்வரும் பேரறிவு !

எனவே நீயும் மறவாமல்
எல்லாம் கற்றுத் தேர்ந்துவிட்டால்
கனவோ என்னும் பலசெயல்கள்
கண்கூடாகக் கண்டிடலாம் !

—சுப்ர பாலன்

அழகு


பாட்டுக்கு அழகு பண்ணாகும்
பாலுக்கு அழகு சுவையாகும்
வீட்டுக்கு அழகு பெண்ணாகும்
வீதிக்கு அழகு விளக்காகும்

கண்ணுக்கு அழகு இமையாகும்
கல்விக்கு அழகு படிப்பாகும்
மண்ணுக்கு அழகு மரமாகும்
மனிதர்க்கு அழகு அறிவாகும்

ஆற்றுக்கு அழகு கரையாகும்
அறிவுக்கு அழகு பணிவாகும்
நேற்றுக்கு அழகு இன்றாகும்
நெஞ்சுக்கு அழகு நெறியாகும்

கடலுக்கு அழகு அலையாகும்
கவிதைக்கு அழகு எளிதாகும்
நாட்டுக்கு அழகு நட்பாகும்
நாவிற்கு அழகு நயமாகும்.

— நாஞ்சில்ஷா



சேஃப்டி பின் பிறந்த கதை

ஆர். விஜயா

"சொக்காயைத் திறந்து போட்டுக் கொண்டு போகாதேடா — ரங்கு. பொத்தானைப் போட்டுக் கொண்டு போடா'' என்கிறாள் அம்மா.

''போ, அம்மா. பொத்தான் எல்லாம் உதிர்ந்து போச்சும்மா !'' என்கிறான் ரங்கு.

''அப்போ இந்தாடா, சேஃப்டிபின். போட்டுண்டு போடா'' என்று ஒரு சின்ன, அழகான, பளபளவென்று மின்னுகிற 'சேஃப்டி பின்'னைத் தருகிறாள் அம்மா.

யார் கண்டு பிடித்தார்கள் இந்த சேஃப்டி பின்னை ? இது பிறந்த கதை என்ன?

தற்செயலாகத்தான் பிறந்தது, உலகம் முழுவதிலும் இன்று பயன்படுத்தப்படும் சேஃப்டி பின். அப்படி ஒன்றைக் கண்டு பிடிக்கப் போகிறோம் என்று அதைக் கண்டுபிடித்த வால்டர் ஹண்ட்டுக்கே தெரியாது.

அது 1849ம் ஆண்டு. நியூயார்க்கில் இருந்த தன் சின்ன பட்டரையில் கவலையே உருவாக உட்கார்ந்திருந்தான் ஓர் இளைஞன். ஒரு நண்பனுக்கு அவன் அன்று பதினைந்து டாலர் கட்டாயம் தந்தேயாக வேண்டும். கடன் வாங்கியிருந்தான்.

இளைஞனின் நினைவுகள் எங்கெங்கோ அலைந்து கொண்டிருந்தன. அப்போது அவன் கையில் ஒரு சிறு பித்தளைக் கம்பி இருந்தது. ஏதோ ஞாபகத்தில் அவன் கைகள் அந்தக் கம்பியை இப்படியும் அப்படியுமாக வளைத்துக் கொண்டிருந்தன.

வெகுநேரம் வரை பதினைந்து டாலர் பணத்தை எப்படித் திரட்டுவது என்று இளைஞன் வால்டர் ஹண்ட்டுக்குத் தெரியவில்லை. ''சரி, போய் அவனிடமே இன்னும் இரண்டு நாள் வாய்தா கேட்போம்'' என்று எழுந்தான்.

பாதி வழி போகிற போதுதான் கையோடு அந்த சின்னப் பித்தளைக் கம்பியையும் கொண்டுவந்திருப்பது தெரிந்தது. அதைப் பார்த்ததும் அவன் முகத்தில் ஒரு பிரகாசம் ஏற்பட்டது. ''பஸ்ட் கிளாஸ் ஐடியா'' என்றவாறே அவசரமாகத் தன் பட்டறைக்குத் திரும்பி வந்தான்.

பித்தளைக் கம்பியை நடுவில் வளையம்போல் வருமாறு வளைத்தான். பிறகு அதன் ஒரு முனையை ஒரு கொக்கி மாதிரி செய்தான். இன்னொரு முனையைக் கூராக்கி வளைத்துக் கொண்டு வந்து அந்தக் கொக்கியில் படியவைத்தான்.

மூன்றே நிமிஷத்துக்குள் உலகின் முதல் சேஃப்டி பின் தோன்றிவிட்டது.



வால்டர் ஹண்ட் அந்தப் பின்னை எடுத்துக் கொண்டு நேராக ஒரு பெரிய கம்பெனிக்குப் போனான். அது நவீன கண்டு பிடிப்புக்களின் உரிமையை விலைக்கு வாங்கிக் கொள்ளும் கம்பெனி.

வால்டர் ஹண்ட் அந்தக் கம்பெனியிடம் 'சேஃப்டி பின்'னின் கண்டுபிடிப்பு உரிமையை விற்றான். கைமேல் நானூறு டாலர் கிடைத்தது. கடனும் தீர்ந்தது.

மூடுபனி எங்கிருந்து வருகிறது?

மூடு பனி என்பது உண்மையில் மேகம் தான். நுண்ணிய நீர்த் துளிகளால் உருவானவை மேகங்கள். நீராவியினால் ஆனவை மூடுபனி. மேகத்துக்கும் மூடு பனிக்கும் உள்ள ஒரே வேற்றுமை மேகங்கள் மேல் நோக்கிச் செல்லக் கூடியவை; மூடுபனியோ பூமியை நோக்கி வந்து படிந்துவிடக் கூடியவை. 'ஃபாக், மிஸ்ட்' என்று ஆங்கிலத்தில் கூறப்படும் இரண்டுமே மூடுபனி தான். மூடுபனி வெளுப்பாகவும் சுத்தமானதாகவும் இருக்கும் என்று தான் நாமெல்லாம் சாதாரணமாக எண்ணுவோம். ஆனால் மூடுபனி எப்போதும் எல்லா இடங்களிலும் வெண்மையாகவும் சுத்தமாகவும் இருக்காது.

கரியை வெளிவிடும் புகைப் போக்கிகளைக் கொண்ட தொழில் நகரங்களின்மீது மூடு பனி உறையுமானால் அது கறுப்பாகத்தான் இருக்கும். மூடுபனியில் உள்ள நீர் அணுக்கள் சுற்றியுள்ள கரி தூசி, அழுக்கு இவைகளை ஏற்றுக் கொண்டு கறுப்பாக மாறிவிடும். மூடுபனி இந்த அழுக்குகளைக் காற்றிலிருந்து வடிகட்டிப் பூமியில் சேர்த்து விடுவதால் காற்று சுத்தப்படுத்தப்படுகிறது.

இம்மூடுபனி இருள் மண்டிய இரவை இன்னும் இருட்டாக்கும். காற்று வீசி இந்த மூடு பனிகளைக் குலைக்கச் சூரியன் பளீரிடுவான். - இ



மானங்காத்த மைந்தன்

கௌசிகன்

இன்றைய பாரதத்தின் தலைநகரான தில்லிக்கு அன்று இந்திரப் பிரஸ்தம் என்று பெயர். இந்திரப் பிரஸ்தத்தை வழி வழியாக ஆண்டு வந்தனர் வீர ராஜபுத்திரர். அவர்களில் கடைசியாக ஆண்ட மன்னன் பிருதிவிராஜன். பிருதிவிராஜன் என்றதும் உங்களுக்குச் சம்யுக்தையின் பெயர் நினைவு வரும். அழகின் அவதாரமான அவள் ஜயச்சந்திரனின் அன்பு மகள். பிருதிவியும் ஜயச்சந்திரனும் தாயாதிகள். கன்னோசியின் காவலன் ஜயச்சந்திரன். வீரத்தின் இருப்பிடம். அதே போல் பொறுமையின் பிறப்பிடம்!

முகம்மது கோரி பாரதத்தில் அடியெடுத்து வைத்தபோது அவனை ஓட ஓட விரட்டியடித்தவன் ஜயச்சந்திரன். அதே வீரன் பின்னால் என்ன செய்தான் தெரியுமா? எவன் காலடி இப்பாரத பூமியில் படக் கூடாது என்று பதைத்து அவனை உதைத்து அனுப்பினானோ, அதே முகம்மது கோரியை — 'என் தாய்த் திருநாட்டை அடிமை கொள்ள வா' என்று இரு கைகளை நீட்டி வருந்தி அழைத்தான். எதனால்? பொறுமை. பிருதிவியின் வீரங் கண்டு, அவனது வணங்காத்தனம் கண்டு வெகுண்டான். விபரீதமான முறையிலே அவமானப்படுத்த முனைந்தான். எப்படி? தன் மகளின் சுயம்வரத்துக்குத் தேச தேசத்து வீரர்களுக்கெல்லாம் மன்னர்களுக்கெல்லாம் அழைப்பு அனுப்பி மாவீரனான பிருதிவிக்கு மட்டும் அழைப்பு அனுப்பாமல் அவன் சிலையைக் காவல்காரனாக்கிச் சுயம்வர மண்டபத்தின் நுழை வாயிலிலே நிறுத்தி வைத்திருந்தான் ஜயச்சந்திரன்! ஆனால் தந்தையின் அகம்பாவத்தை ஆணவத்தை மகள் சம்யுக்தை சாம்பலாக்கி விட்டாள்.

பிருதிவியின் வீரத்திலே, அழகிலே, புகழிலே தன் மனத்தைப் பறி கொடுத்திருந்த மங்கை அவள். காவல்காரனாக நின்ற தன் காதலனின் சிலைக்கு மாலை அணிவித்தாள் சம்யுக்தை. சிலையின் பின்னால் மாறுவேடத்தில் மறைந்திருந்த பிருதிவிராஜன் மாலையிட்ட மங்கையை அள்ளி அணைத்தபடி தயாராக இருந்த தன் குதிரையின் மீது ஏறிக் காற்றெனப் பறந்தான். அவமானப்படுத்த நினைத்த ஜயச்சந்திரன் அவமானப்பட்டுப் போனான். ஆத்திரம் கொண்டவன் தன் பெரும் படையுடன் பிருதிவியைத் தாக்கினான். மகோபா என்ற இடத்திலே பிருதிவிக்கும் ஜயச்சந்திரனுக்கும் கடும் போர் நிகழ்ந்தது. முடிவு? பிருதிவி வெற்றி வீரனாகத் திரும்பினான். ஜயச்சந்திரனோ தோற்றோடினான்.

அந்த அவமானத்தைத் தாங்க முடியாத கன்னோசி மன்னன் சுயவுருக மாறினான். அந்நியனான முகமது கோரியின் உதவியோடு மறுபடியும் பிருதிவிராஜன் மீது படையெடுத்து வந்தான். தலைநகரைச் சுற்றிலும் தலைகள் உருண்டு கிடந்தன. நால்வகைப் படைகளின் பாசறைகள். அதன் நடுவே பிருதிவிராஜனது படை வீடு. தோற்றோடியவர்களை மறுபடியும் வெற்றி கொள்வது வீரனான பிருதிவிக்கு ஒரு பெரிய காரியமல்ல. ஆனால் அந்நியனோடு உறவு




கொண்டானே இந்த ஜயச்சந்திரன் என்று ஆதங்கப்பட்டான். அடுத்த நாள் போருக்கு யாரைப் படைத் தலைவனாக்குவது என்ற முடிவெடுக்கக் கூடியிருந்தனர், மாவீரர்கள், மாமன்னனின் படை வீட்டிலே. நேரமோ நடுநிசி. கூடாரத்திலே குழுமி யிருந்த வீரர்களிலே பதினாலே வயதுடைய சிறுவன் ஒருவன் காணப் பட்டான். களையான முகம், கம்பீரமான தோற்றம். கையிலே ஈட்டி, இடையிலே வாள். போர்க்கோலம் பூண்டிருந்த அச் சிறுவனின் முகத்திலே வீரக்கனல் தெறிக்கிறது. கை வாளைப் போலவே கண்களும் ஜொலிக்கின்றன.

''அரசே! அந்தக் குலத் துரோகி ஜயச்சந்திரனையும், குள்ளநரி கோரியையும் புறமுதுகிட்டு ஓடச் செய்வேன். இல்லையேல் அந்த யுத்த பூமியிலேயே நான் ஆவி துறப்பேன். என் உருவம் கண்டு யோசிக்க வேண்டாம். படைத் தலைமையைப் பயப் படாமல் தாருங்கள். பகைவரைப் பதைத் தோடச் செய்வேன். நானும் ஆறுதல் அடைவேன்'' என்றான் 'அலங்காரன் என்ற அந்தச் சிறுவன்.

பிருதிவி முகத்தில் முறுவல் மலர அலங்காரனின் ஆவேசமான பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் மனம் மகிழ்ச்சியால் விம்மிதம் அடைந்தது.

ஆனால் மன்னரைச் சுற்றியிருந்த படைத் தலைவர்களோ அலங்காரனை அலட்சியமாகப் பார்த்தனர். ''பால் மணம் மாறாத பாலகன். பகைவனோ பலம் மிக்கவன், படை பலம் கொண்டவன். இளங் கன்று பயமறியாமல் படபடக்கிறான். மன்னவர் என்ன முடிவு எடுக்கிறாரோ, தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம்'' என்று ஒவ்வொருவரும் பலப் பல எண்ணியபடி மௌனமாக இருந்தார்கள்.

பிருதிவிராஜன் அலங்காரனை நோக்கி, ''மைந்தா! உன் ஆவேசம் கண்டு ஆனந்த மடைகிறது என் உள்ளம். ஆனால் இது விளையாட்டு அரங்கமல்ல. விஷப் பரீட்சை செய்யும் நேரமுமல்ல. வினை புரியுமுன் தன்வலி, துணை வலி, மாற்றான் வலி, அனைத்தையும் அறிந்து ஆய்ந்து செயல்பட வேண்டும் அல்லவா? ஆகவே.....'' என்ற மன்னனை முடிக்க விடவில்லை அலங்காரன்...



அவன் கண்களில் நீர் நிறைந்தது. ஒரு கை வாளையும் மறு கை ஈட்டியையும் இறுகப் பற்றின. ''அரசே! என் குல மானம் காக்கவே உங்களிடம் படைத் தலைமை கேட்கின்றேன். என் தந்தையின் புகழுக்குப் பங்கம் நேர்ந்ததை நான் பார்த்துக் கொண்டு உயிர் வாழ்வேனா? புலிக்குப் பிறந்தது பூனையாகாது என்பதை நிரூபிக்க வேண்டும். என் தந்தை—உங்கள் தோழருக்கு ஏற்பட்டுள்ள களங்கம் மறைய வேண்டும். என்னைக் களத்துக்கு அனுப்புங்கள்'' என்று தலை வணங்கிக் கேட்டான் அலங்காரன்.

சிறுவனின் விளக்கம் கேட்ட பிருதிவிராஜன் பதைத்துப் போனான். ''என்ன சொன்னாய் அலங்காரா? உன் தந்தைக்கு, வீரத்தின் பிறப்பிடமான அந்தத் தியாகிக்குக் களங்கமா? சௌம்யராயன் கீர்த்திக்கு மாசு கற்பித்தது யார், சொல்? இப்போதே இந்த உடைவாளுக்கு உணவாக்குகிறேன், அவன் உயிரை'' என்று வெகுண்டு எழுந்தார் தம் இருக்கையிலிருந்து.

''யாரை என்று சொல்வேன், மன்னவா? மகோபா யுத்தகளத்துக்குப் போன என் தந்தை வெற்றி கொண்ட வீரரோடு திரும்பவில்லை. போர்க்களம் போய் விழுப்புண் தாங்கிய அவரது உடலைத் தேடினேன். கிடைக்கவில்லை. 'எதிரிக்குப் பயந்து எங்கோ ஓடிவிட்டார் உன் தந்தை. இங்கு தேடினால் எங்கு கிடைக்கும்?' என்றனர். வேல் கொண்டு குத்தியது போன்ற வேதனையை அடைந்தேன்'' என்றான் அலங்காரன் நெஞ்சடைக்க.

இதைக் கேட்ட பிருதிவிராஜன் முகம் சிவந்தது. அவர் உடல் நடுக்கம் உள்ளக் கொதிப்பைக் கூறுவது போலிருந்தது. மௌனமாகச் சிலபோது அமர்ந்திருந்த பிருதிவியின் விழிகளிலிருந்து கண்ணீர் பெருகி வழிந்தது. அன்று மகோபா யுத்த களத்தின் காட்சி அவர் கண்முன் விரிந்தது.

''மகனே அலங்காரா, அலமந்து போகாதே. உன் தந்தை என் அருமைத் தோழர் அற்புத வீரர். சௌம்யராயன் தியாகத் திலகம். அவரை இழிவாகப் பேசும் கயவர்களின் நாவைத் துண்டிப்பேன். அன்று அந்த மகோபா யுத்த களத்திலே நடந்ததை இன்று நினைத்தாலும் என் உடல் புல்லரிக்கிறது. அவருக்கு இணையான ஒரு பிறவியை இனிக் காண முடியுமா?

''அன்று நடந்தது இங்குள்ளோர் யாருக்குமே தெரியாது. மகோபா யுத்த முடிவிலே கோரமான வாட் போர். உன் தந்தையையும் என்னையும் சூழ்ந்து கொண்டார்கள் பகைவர்கள். விரோதிகளை வெட்டிச் சாய்த்துக் கொண்டிருந்தோம். சுலபமாக வந்து கொண்டிருந்த நீசர்களோடு போராட உன் தந்தையின் உதவி இன்றியமையாததாக இருந்தது எனக்கு. கை சோர்ந்தது. என் அருகிலிருந்து என்மீது பாய வந்த பல தாக்குதல்களைத் தன் வாளினாலும் தோளினாலும் தடுத்துக்கொண்டிருந்தார் உன் தந்தை. நேரமாக ஆக என்னால் சமாளிக்க முடியவில்லை. 'உடலெங்கும் காயம். ரத்தப் பெருக்கு. நினைவிழந்தேன். ஆனாலும் விரோதிகளை விரட்டியடித்த பின்பே என் நினைவு தப்பியது. யுத்த களத்திலே அப்படி எத்தனை நேரம் கிடந்தேனோ அறியேன்.

''எனக்கு நினைவு திரும்பியபோது சுற்றும் முற்றும் நோக்கினேன். போர்க்களம் பிணக் களமாக இருந்தது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை வீரர்களின் வெட்டுண்ட உடல்கள், குதிரை, யானை, காளைகளின் உடலங்கள்! வானத்திலே கழுகுகளும் வல்லூறுகளும் பருந்துகளும் பிணக் குவியலை விருந்தாக்கிக்கொள்ள வட்டமிட்டுக் கொண்டிருந்தன. என் உடலுக்கு மேலே இரு கழுகுகள் என்மீது பாய்வதற்குத் தயாராகக் கீழே கீழே இறங்கிக்கொண்டிருந்தன வெகு வேகமாக. என்னால் என் உடலை நகர்த்தவும் முடியவில்லை.

''கழுகுகள் மூர்க்கமாக என் உடல் மீது பாய்ந்தன, சதைகளைக் கொத்தித் தின்பதற்காக. உயிர் இருக்கிறது. நினைவிருக்கிறது. அபாயத்தை உணர முடிகிறது. ஆனால் அவைகளிடமிருந்து தப்ப என்னால் ஏதுமே செய்ய முடியவில்லை. அங்கங்களை அசைக்கவே முடியவில்லை. அப்படி ஒரு வலி, இசிவு.

''கண்களைச் சுழற்றித் திருப்பினேன். ஐயோ! நான் கண்ட காட்சி! அதை எப்படிச் சொல்லுவேன்? இதோ பார், இப்போதும் என் உடல் சிலிர்க்கிறது. என் வாளுக்கும் தோளுக்கும் உயிருக்கும் உடலுக்கும் உறுதுணையாக, என் அருகிலேயே நின்று போரிட்ட உன் தந்தை சௌம்யராயன் ஆபத்துக் காலத்திலும் என் அருகேதான் கிடந்தார், எப்படி? இரு கால்களும் இழந்த நிலையில். என்னைக் கழுகுகள் கொத்திக் குதற வருவதைக் கண்ட அந்த உடல் துடித்தது. என்னைக் காப்பாற்றத் தவித்தாலும் கால்கள் அற்ற அவரால் நகர்ந்து வரவும் முடியவில்லை. ஆனாலும் என்ன செய்தார் தெரியுமா? எப்படிச் சொல்லுவேன்? என்னைக் கொத்திக் கொல்ல வரும் கழுகுகளின் பசிக்குத் தன் உடலின் சதையை வாளால் வெட்டி, வானிலே வீசி

னார் உன் தந்தை. கழுகுகளுக்கு, மன்னவரின் சதையானால் என்ன பாமரனின் பிணமானால் என்ன? பசி ஆற வேண்டும் அவ்வளவே. சதைத் துண்டங்கள் விழும் பக்கம் கழுகுகளின் கவனம் திரும்பியது. அவை என்னை விட்டு விலகின. மறுபடி நினைவு திரும்பியபோது அரண்மனையிலே பட்டு மெத்தையிலே படுத்திருக்கக் கண்டேன். என்னைச் சுற்றி வைத்தியர்களும் உற்றார் உறவினரும் கூடியிருந்தார்கள்.

''மகனே, அலங்காரா! உன் தந்தையின் உடலைப் போர்க் களத்தில் காணவில்லை என்று கலங்கினாயே, கயவர்கள் அவர் புறமுதுகிட்டு ஓடிவிட்டார் என்று கதை கட்டி விட்டதைக் கேட்டு வெட்கினாயே, என்னைக் காக்க, என் மூலம் இந்நாட்டைக் காக்கத் தன் உடல் சதையைத் துண்டம் துண்டமாக வெட்டிக் கழுகுகளுக்கு உணவாக்கி விட்டு உருத் தெரியாமல், மறைந்த உத்தமரின் உடல் இந்த உலுத்தர்களின் பார்வையில் எப்படிப் படும்? ரணகளத்திலே நிகழ்ந்த இந்த அற்புதத்தை என்னையன்றி யாரே அறிவர்?

''சிபியின் வரலாற்றைக் கதையாகக் கேட்டிருக்கிறேன். அன்றோ அதை என் கண்ணாலே கண்டேன். இன்னுமா உன் தந்தையின் வீரத்திலே, தியாகத்திலே சந்தேகம்? சௌம்யராயன் பெற்ற ரத்தினமே, உன் தந்தை மாசு மறுவற்ற வீரர் திலகம். அவரின் மகனான உன்னிடமும் அந்த வீரம் விளங்கும் என்பதை நான் அறிவேன். நாளைப் படைத் தலைமை உனக்கே. சென்று வா, வென்று வா'' என்று உணர்ச்சி வசப்பட்டுக் குரல் கம்மக் கூறி முடித்தார் பிருதிவிராஜன். கூடியிருந்தோர் சௌம்யராயனின் செயல் கேட்டு உள்ளம் உருகினர். அதுவரை கொண்டிருந்த எண்ணத்துக்காக வெட்கிக் குறுகினர். அலங்காரனுக்கும் ஆசி கூறினர்.

சரித்திர காலப் பொம்மைகள்

ஐரோப்பிய நாடுகளின் சரித்திர காலங்களை நினைவுக்குக் கொண்டுவரும் தேசிய உடையலங்காரங்களைக் கொண்ட அழகிய பொம்மைகளை உருவாக்குகிறது தெற்கு இங்கிலாந்தில் உள்ள ஒரு நிறுவனம். கடந்த கால நாகரிகங்களை எழுத்தில் படிப்பதை விட இம்மாதிரி ஜீவகளை ததும்பும் பொம்மைகளை அந்த அந்தக் காலத்துக்கு ஏற்ற தேசிய உடைகளில் பார்க்கும்போது இளம் உள்ளங்களில் சரித்திரம் அப்படியே ஒட்டுப்படமாகப் பதிந்துவிடுமே. —உதவி: **பிரிட்டிஷ் இன்பர்மேஷன்.**



தந்திரக் கழுதை

ஜாஜு

வெகு காலத்துக்கு முன்பு ஒரு கிராமத்தில் வேலப்பன் என்ற விவசாயி வசித்து வந்தான். அவன் நல்ல உழைப்பாளி. மிருகங்கள் பேசுவதை அறிந்து கொள்ளக்கூடிய அபூர்வ சக்தியையும் வேலப்பன் பெற்றிருந்தான்.

வேலப்பனிடம் ஒரு கழுதையும், எருமையும் இருந்தன. எருமைதான் வயலில் உழவு வேலையைச் செய்து வந்தது. இரண்டு மிருகங்களையும் வேலப்பன் ஒரே இடத்தில்தான் அடைத்து வைத்திருந்தான். ஒரு நாள் அவன் கொட்டில் பக்கம் வந்தபோது கழுதையும் எருமையும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டான்.

''நான் எவ்வளவு கஷ்டப்படுகிறேன், தெரியுமா? நான் தவறாமல் என்னை வயலுக்கு இழுத்துப் போய் எஜமானர் வேலை வாங்குகிறார். வெயிலிலும் மழையிலும் உழவு வேலையைச் செய்கிறேன். உன்பாடு கொண்டாட்டம்தான். சுகவாசியாகக் கொட்டிலிலேயே இருக்கிறாய்'' என்று கழுதையிடம் எருமை கூறியது.

''நீ சொல்வதிலும் நியாயம் இருக்கிறது. எஜமானர் என்னைச் சுகவாசியாகத்தான் வைத்திருக்கிறார்'' என்றது கழுதை.

''உன்னைப் போல் நானும் மகிழ்ச்சியாக இருக்க என்ன வழி?'' என்று எருமை கேட்டது.

''சுலபமான வழி இருக்கிறது. நீ நினைத்தால் அதன்படி செய்யலாம். உனக்கு ஓய்வும் மகிழ்ச்சியும் கிடைக்கும்'' என்றது கழுதை.

''அப்படியா? சீக்கிரம் சொல்லு. உனக்குக் கோடிப் புண்ணியம் உண்டு'' என்று ஆர்வத்தோடு எருமை கூறியது.

''எஜமானர் நாளை உன்னை வயலுக்கு அழைத்துப் போவார் அல்லவா? வயலில் இறங்கியதும் கொஞ்ச நேரம் வேலை செய். பிறகு வேலை செய்ய முடியாதது போல் படுத்துவிடு. துன்பத்தால் துடிப்பதுபோல் நீ பாசாங்கு செய்ய வேண்டும். உனக்கு நோய் கண்டிருக்கிறது என்று நினைத்து எஜமானர் வீட்டுக்கு அனுப்பி விடுவார்.'' கழுதை இப்படி யோசனை கூறியது.


எருமைக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

''நண்பன் என்றால் நீதான் நண்பன். எவ்வளவு அருமையான யோசனை. உனக்கு எப்படி நன்றி சொல்லுவேன்! நாளையே இந்தத் தந்திரத்தை நிறைவேற்றுகிறேன்'' என்று எருமை பெருமையுடன் கூறியது.

வயலில் படுத்துவிட்டால் எஜமானர் அனுதாபப்பட்டு வீட்டுக்கு அனுப்பிவிடுவார். அப்புறம் நிழலிலேயே ஓய்வாக இருக்கலாம். நேரத்துக்குத் தீனி கிடைக்கும், கழுதையைப் போலவே சுகவாசியாக இருக்கலாம் என்று எண்ணி எண்ணி மகிழ்ந்து கொண்டிருந்தது எருமை.

வேலப்பன் இந்த உரையாடலைக் கேட்டுவிட்டுத் தனக்குள் சிரித்துக் கொண்டான். அவன் மறைந்திருந்து கேட்டது எருமைக்கும் கழுதைக்கும் தெரியாது. இந்தக் கழுதைக்கு இவ்வளவு தந்திரம் தெரிகிறதே என்று ஆச்சரியப்பட்டான்.

அடுத்த நாள் காலையில் வேலப்பன் எருமையை வயலுக்கு அழைத்துப் போனான். வயலில் இறங்கியதும் கொஞ்ச



நேரம் எருமை உழுதது. பிறகு திடீ ரென்று கீழே விழுந்து விட்டது. துன் பத்தால் துடிப்பதுபோல் அது வேஷம் போட்டது.

பாசாங்கைப் புரிந்து கொண்டாலும் வேலப்பன் அனுதாபப்படுவது போல் நடித்தான்.

''என் எருமைக்கு எவ்வளவு கஷ்டம்! என்ன நோய் வந்ததோ, இப்படி விழுந்து விட்டதே. இனிமேல் இதற்கு வேலை கொடுக்கமாட்டேன். வீட்டிலேயே ஓய்வாக இருக்கட்டும்'' என்று அதற்குக் கேட்கிற மாதிரி கூறிய வாறு வீட்டுக்குக் கொண்டு போனான்.

எருமையைக் கொட்டிலில் விட்டு விட்டு வேலப்பன் கழுதையை இழுத்துச் சென்றான். வயலில் அதை இறக்கிவிட்டு ஏரைப் பூட்டினான். கழுதை பயந்து போய் விட்டது.

''நான் எப்படி உழ முடியும்? எருமை யைப் போல் நான் பலசாலியல்லவே. அதைப் போல் கடுமையான வேலைகளை நான் செய்ய முடியாதே! எஜமானர் என்னை விடமாட்டார்போல் தெரி கிறதே!'' என்று தனக்குள் புலம்பிக் கொண்டது கழுதை. அதற்கு அழுகையே வந்து விட்டது. எல்லாம் என் யோசனையால் வந்த வினை என்று கழுதை குமுறியது.

பகல் முழுதும் கழுதைக்குக் கடுமை யான வேலை. வயல் வேலை செய்து பழக்கமில்லாத கழுதை வாடிப் போய் விட்டது. மாலையில் சோர்ந்து போய் வீடு திரும்பிய கழுதை நிற்க முடியாமல் கொட்டிலில் விழுந்துவிட்டது.

''நண்பா! எங்கே சென்றி ருந்தாய்? ஏன் இப்படி விழுந்துவிட்டாய்?'' என்று எருமை கேட்டது.


''நீ இங்கே ஓய் வெடுக்க, உன் வேலையை அங்கே நான் செய்தேன். எல்லாம் என் தலைவிதி. வயலுக்கு இழுத்துப் போய் எஜமானர் வாட்டி விட்டார்'' என்றது கழுதை.

''அட, பாவமே! உன்னால் உழவு வேலையைச் செய்ய முடியாதே, மிகவும் கஷ்டப்பட்டிருப்பாயே?'' என்று எருமை சொன்னது.

''ஒரு நாள்தானே! போகட்டும். நாளைக்குக் குணமடைந்து நீ வேலைக் குத் திரும்பிவிடுவாய், அல்லவா?'' — என்று கழுதை கேட்டது.

''அதெப்படி முடியும்? எனக்கு இனி மேல் ஓய்வுதான். நோயாளியாகவே வேஷம் போட்டுக் கொண்டு வீட்டி லேயே இருந்துவிடுவேன்!'' என்றது எருமை.

எருமைக்கு ஏன் தந்திரம் சொல்லித் தந்தோம் என்று கண்ணீர் விட்டது கழுதை.



அடுத்த நாளும், அதற்குப் பிறகும் கழுதையே வயலுக்குச் சென்றது. வேலப்பன் நன்றாக வேலை வாங்கினான். தினமும் வேலை பார்த்ததால் கழுதை இளைத்துவிட்டது. இனியும் வயலுக்குப் போனால் மடிய வேண்டியது தான் என்று நினைத்து, இதிலிருந்து எப்படித் தப்புவது என்று யோசிக்க ஆரம்பித்தது கழுதை.

அன்று இருட்டுகிற சமயம், களைப்புடன் வீடு திரும்பியது கழுதை. எருமைக்கு அதைப் பார்த்ததும் சிரிப்பு வந்தது. அந்த அளவுக்குக் கழுதை இளைத்திருந்தது.

''திரும்பவும் நாளை வேலைக்குப் போக வேண்டும். ஆனால் எனக்கு ஒரே பயமாக இருக்கிறது'' என்று கழுதை கூறியது.

''என்ன பயம்? வேலைதான் உனக்குப் பழக்கமாயிருக்குமே?'' என்றது எருமை.

''என்னைப் பற்றி யில்லை. உன்னை நினைக்கும்போதுதான் பயமாக இருக்கிறது என்கிறேன்.''

''எனக்கென்ன? நான் இப்பொழுது எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்து வருகிறேன், தெரியுமா?'' என்றது எருமை.

'' நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆனால் உனக்கு நேரக்கூடிய ஆபத்தை அறிந்ததும் என்னால் வருந்தாமல் இருக்க முடியவில்லை. எஜமானர் இன்று வேலைக்காரரிடம் என்ன பேசினார் தெரியுமா ?''

''வைத்தியசாலைக்கு என்னை அழைத்துப் போகச் சொன்னாரா ?''

'' அப்படிச் சொன்னால் மகிழ்ந்திருப்பேன். ஆனால் ஆபத்தான செய்தியை அல்லவா கூறினார்? இனி மேல் நீ பயன்பட மாட்டாய் என்று நினைத்து உன்னைக் கசாப்புக் கடைக்காரரிடம் விற்றுவிடும்படி சொன்னார். நாளைக்குள் நீ குணமடையாவிட்டால் உடனடியாக விற்றுவிடும்படி வேலைக்காரரிடம் சொல்லிவிட்டார். உனக்கு இந்த முடிவா ஏற்பட வேண்டும்? உன்னைக் கொன்றுவிடுவானே, கசாப்புக் கடைக்காரன்!'' என்றது கழுதை.

கழுதை இப்படிச் சொன்னதும் எருமை துடித்துப் போய் எழுந்தது.

அதற்குள் விடிந்தும் விட்டதால் வேலப்பன் கொட்டிலுக்கு வந்தான். கழுதையை இழுத்துப் போவதற்காக அவன் கழுதை அருகே வந்தபோது எருமை துள்ளியபடி வேலப்பனிடம் ஓடி வந்தது. அவனைச் சுற்றிச் சுற்றி வந்தது. விட்டது சனி யென்று கழுதையும் நீண்டதொரு பெருமூச்சுவிட்டது.

பாடலாம், எழுதலாம், படம் போடலாம்

நீங்கள் கீழே காண்பது குழந்தைகள் சுலபமாக சங்கீதம் கற்றுக் கொள்ளத் தக்க விதமாக ஒரு மினி (சின்ன) யந்திரத்தை உருவாக்கியிருக்கிறார்கள் மேற்கு ஜெர்மனியில். மின்விசையில் இயங்கக்கூடியது இந்தப் பொம்மை ஆர்கன். அக்கார்டியன் பியானோ என்ற பெரிய வாத்தியங்களைப் பிற்காலத்தில் சுலபமாகக் கையாளுவதற்கு இது முன்னோடியாக இருக்கும். இதன் மேல் மூடியைப் போட்டு விட்டால், குழந்தைகள் எழுத, படம் தீட்டப் பயன்படும் சின்ன மேஜையாகி விடும்.

உதவி: யு. பி. எஸ்.



புத்திசாலி

மிகப் பெரிய மாட்டுப் பண்ணையின் அதிபர் மகேந்திரன். ஆயிரக் கணக்கான மாடுகள் இருக்கும். அருகே இருக்கும் பால் பவுடர், பால் உணவு, குழந்தை உணவு தயாரிக்கும் தொழிற்சாலை அவருடையதுதான்.

தனது மாட்டுப் பண்ணையில் மாடுகளைப் பராமரிப்பதற்காக திறமையான மூன்று ஆட்கள் தேவைப்பட்டதால் பத்திரிகைகளில் அவர் விளம்பரம் கொடுத்தார்.

வேலை இல்லாமலிருக்கும் பலர், மாடுகளைப் பற்றி ஆறு ஆவன்னுகூடத் தெரியாமலிருந்தும், மனுச் செய்து நேரடிப் பேட்டியின்போது அகப்பட்டுக்கொண்டு விழித்து மகேந்திரனைத் தொந்தரவுபடுத்தினர். ஒரு மாதமாகியும், இருநூறு பேர்களுக்கு மேல் பேட்டி நடத்தியும் ஒருவர்கூடக் கிடைக்கவில்லை.

ஒரு நாள், ''ஆண்டவனே ! இன்றைக்காவது நல்ல நபர் கிடைக்க வேண்டும்'' என்று முணுமுணுத்துக் கொண்டே தமது ஆசனத்தில் வந்து அமர்ந்தார்.

நேரடிப் பேட்டிக்கு ஐந்து பேர் வந்தனர். வினாவுக்கேற்ற விடை அளித்தவர் மூன்று பேர்கள் மட்டுமே. இருவரைத் தள்ளுபடி செய்துவிட்டார்.

சரியான விடை அளித்த மூவரையும் நோக்கி, ''இங்கிருந்து ஒரு மைல் தொலைவில் ஒரு சிறு கிராமம் இருக்கிறது. அங்கு வேலன் என்ற விவசாயிடம் பதினைந்து மாடுகள் கொண்ட சிறு பண்ணை இருக்கிறது. உங்கள் ஒவ்வொருவரிடமும் ஆயிரம் ரூபாய் தருவேன். எனக்கு என்று கேளுங்கள். ஒவ்வொரு மாடும் இருநூறு ரூபாய் சொல்வார். ஆளுக்கு ஐந்து மாடுகள் வாங்கி வரவேண்டும். யார் நல்ல மாடுகளாக வாங்கி வருகிறீர்களோ, அவர்களுக்கே வேலை கிடைக்கும்'! நீங்கள் போகும்போதும் வரும்போதும் எனது ஆட்கள் கண்காணிப்பார்கள். நினைவிருக்கட்டும் !'' என்று கூறி ஆயிரம் ரூபாயாகக் கட்டப்பட்ட மூன்று கட்டுக்களை மேஜையின் மீது எடுத்துப் போட்டார்.

மூவரும் ஆளுக்கொரு கட்டாக எடுத்துக் கொண்டனர். அருகே ஒரு மைல் தொலைவில் உள்ள கிராமத்தை அடைந்தனர்.

வேலனின் வீட்டை விசாரித்து அறிந்து சென்றனர். வேலன் எங்கும் செல்லாமல் வீட்டிலேயே இருந்தான்.

வேலனை வணங்கி, ''நாங்கள்.....'' எனப் பேச்சை ஆரம்பித்தவுடன் வேலன் குறுக்கிட்டான்.

''நீங்கள் முத்து, பாலு, வைரம் என்பதும் மற்ற எல்லா விவரங்களும் எனக்குத் தெரியும். ஆளுக்கு ஆயிரத்தை எடுத்து வையுங்கள். ஒரு நிபந்தனை ! என்னிடமுள்ள மாடுகளை நான் நேரடியாகக் காட்டமாட்டேன். தேவையைச் சொன்ன பிறகே பிடித்துப் போக அனுமதிப்பேன் !

''என்னிடமுள்ள பதினைந்து மாடுகளில் ஐந்து நன்றாக ஓடக்கூடியவை. ஐந்து நிற்கக்கூடியவை. ஐந்து படுக்கக் கூடியவை. ஒவ்வொருவரும் உங்களுக்கு வேண்டியதைச் சொல்லுங்கள்! பின்பு மாட்டை அடைத்துள்ள கொட்டிலுக்கு அழைத்துப் போகிறேன் !''

ஏதோ மர்மக் கதை கூறுவதுபோல் வேலன் கூறினான்.

நன்றாக ஓடும் மாடுகள்தாம் ஆரோக்கியமானதாக இருக்கும் என்று எண்ணிக் கொண்டு, ''எனக்கு நன்றாக ஓடக்கூடிய மாடுகளே வேண்டும்! இந்தாருங்கள், பணம் !'' — முத்து முந்திக் கொண்டான்.

'' எனக்குப் படுத்திருக்கும் மாடுகள் தான் வேண்டும்!'' என்று சொல்லி ஆயிரத்தைக் கொடுத்தான் வைரம். மடியில் சுரக்கும் பாலின் கனத்தினால் நிற்க முடியாத மாடுகள் படுத்துக் கொண்டுவிடும் என்று அவனுக்குத் தெரியாதா என்ன?

பாலு ஒன்றும் பேசாது வைரம் முத்து வேலன் மூவரையும் மாறி மாறிப் பார்த்தான்.

''என்னப்பா, பாலு ! உனக்கு ?''— வேலன் கேட்டான்.

'' எனக்கு நிற்கக்கூடிய மாடுகளைக் கொடுங்கள் !'' வேறு வழியில்லாமல்



வின்மணி

தமிழ் தெரியுமா?

ஒரே எழுத்தில் பொருள் கொள்ளும் தமிழ்ச் சொற்கள் :

1. அ—எட்டு; 2. ஆ—பசு; 3. ஈ—ஒரு வகை பூச்சி; 3. உ—சிவன்; 4. ஐ—தலை; 6. ஐ—ஐந்து; 7. ஓ—மதகு நீர் தாங்கும் பலகை; 8. கா—சோலை; 9. கு—பூமி; 10. கூ—பூமி; 11. கை-கரம்; 12. கோ-அரசன்; 13. சா-இறப்பு; 14. சே—அழிஞ்சில் மரம்; 15. சோ—மதில்; 16. தா—கேடு; 17. தீ—நெருப்பு; 18. து—உணவு; 19. தூ—பறவை இறகு; 20. தே—நாயகன்; 21. தை—ஒரு மாதம்; 22. நா-நாக்கு; 23. நௌ-மரக்கலம்; 24. பா-பாட்டு; 25. பூ-மலர்; 26; பே—மேகம்; 27. பை—பாம்புப் படம்; 28. மா—மாமரம்; 29. மீ—ஆகாயம்; 30. மூ-மூன்று; 31. மை-அஞ்சனம்; 32. யா-அகலம்; 33. வீ—பறவை; 34. வை—வைக்கோல்.

— வி. பி. ராஜு

பாலு கவலையோடு கேட்டான். ரூபாய் ஆயிரத்தையும் எடுத்துக் கொடுத்தான்.

வேலன் மூவாயிரம் ரூபாயையும் எடுத்து வீட்டினுள் சென்று வைத்து விட்டு வந்து, ''என்னுடன் வாருங்கள்'' எனச் சிறிது தூரம் தள்ளியிருந்த மாட்டுக் கொட்டிலுக்கு அவர்களை அழைத்துச் சென்றான்.

கொட்டிலின் அருகே சென்றதும், ''நான் கொட்டிலைத் திறந்ததும் அவரவர் மாட்டை அவரவர் பிடித்துக் கொள்ளுங்கள்!'' என்று சொல்லிக் கொட்டிலைத் திறந்தான்.

திறந்ததும் ஐந்து கொண்டி மாடுகள் விழுந்தடித்துக் கொண்டு ஓடின. முத்து விக்கித்துப் போய் ஒரு நிமிஷம் நின்றாலும் அவற்றை விரட்டிக் கொண்டே ஓடினான். கையில் அகப்படாது அவை மூலைக்கு ஒன்றாய் ஓடின.

உள்ளே வயதான ஐந்து காளைகள் எலும்பும் தோலுமாக இறக்கும் தறுவாயில் படுத்துக் கிடந்தன.

''அதுதான் உனது படுத்திருக்கும் மாடுகள்!'' என வேலன் கூறவே வைரத்துக்கு மயக்கமே வந்துவிட்டது.

கடைசி ஐந்து மாடுகள்தாம் நின்று கொண்டிருந்தவை. அவை ஐந்தும் பசுக்கள். அவை தமது இளங்கன்றுகளுக்குப் பால் கொடுத்தவாறு நின்று கொண்டிருந்தன.

மூவரில் நிற்கிற மாடுகளைக் கேட்ட பாலுவுக்கு மட்டும்தான் மகேந்திரன் பண்ணையில் வேலை கிடைத்தது என்று சொல்லவும் வேண்டுமா ?




இந்த இதழில் நிக்சன்

- தாணு



அடுத்த இதழில் யார்?


ஷீலாவைக் காணோம்
கதை.. வாண்டுமாமா
சித்திரம்.. ரமணி..
12
கயவர்கள் இருவருடைய வீட்டுக் கதவில் மோதிக் கொண்டிருந்த போது ஷீலாவும் டைகரும் கூரைப் பலகணி வழியே வெளியேறி விடுகிறார்கள். ஆனால் கொஞ்ச தூரம் போவதற்குள்...
ஐயோ! அந்தப் பாவிகள் நம்மைத் துரத்தி வருகிறார்கள் டைகர். வேகமாக ஓடு.
ஷீலாவுடன் ஓடி வந்து கொண்டிருந்த டைகர் ஓர் இடத்தில் மரப் பலகை மீது ஊர நெருங்கிறது. கூர்மை அறிவுடைய அதற்குப் பலகையின் கீழே பெரும் பள்ளம் இருப்பதற்கான அறிகுறியையும், ஷீலாவின் காலடி ஓசையால் அப் பலகை மடித்திருப்பதையும் உணருகிறது. துரத்தி வருபவர்கள் நெருங்கி விட்டதை உணர்ந்த டைகர் சட்டென்று ஷீலாவின் குறுக்கே பாய்ந்து அவளைக் கீழே விழப் பண்ணுகிறது...
இடறி விழுந்தவளை விரைந்து பிடிக்கும் ஆவலும் ஆத்திரமும் அதிகரிக்க, மரப் பலகை மீது வேகமாக இருவரும் ஒரே சமயத்தில் தாவி ஏறவே மடித்துப் போயிருந்த அப் பலகை அவ்விருவரின் உடல் கனம் தாங்காமல்...
அது ஒரு பாழுங் கிணறு. இருவரும் அதற்குள் தஞ்சம் புகுந்தார்கள். எதிர் பார்த்தது நடந்து விட்ட மகிழ்ச்சி டைகரின் முகத்தில்..
இதற்காகத்தான் என் காலை இடறி விட்டாயா டைகர்?
டைகர், நீதான் எத்தனை அறிவோடு காரியங்களைச் செய்கிறாய்! நாம் இப்போதே ஓடிப் போய்த் தாத்தாவை விடுவித்து இங்கு அழைத்து வருவோம், வா.



றில் தள்ளி விட்டு வந்திருக்கிறோம். அவர்களை என்ன செய்வ தென்பதை நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும்..
அதோ அந்த இடத்தில்.. அவ் இருவரையும் பாருங்கள்.
ஹ..ஹ..ஹா! திருட்டுப் பயல் களுக்கு ஏற்ற தண்டனை தான். இவர்களால் அங்கிருந்து ஏறி வர முடியாது. சுவ ரெல்லாம் பாசி வழுக்கும்.
இந்தப் பயல்களை நான் கவனித்துக் கொள்ளுகிறேன். ஷீலா கான்வென்டில் படித்த உனக்குத் தான் குதிரை சவாரி செய்யத் தெரியும். என் குதிரைக்கு இங்குள்ள வழியெல்லாம் தெரியும். இதன் உதவியால் போலீஸ் நிலயத்துக்குப் போய் அவர்களை இங்கு — அனுப்பு, என்ன?
போய் வருகிறேன் தாத்தா..டா..டா!
சீக்கிரம் போ. போலீஸ் நிலயத்துக்குக் குதிரையே கொண்டு போகும் உன்னை. கூட டைகர் வேறு இருக்கிறதே.
ஆனால் எதிர் பாராத ஒரு தடங்கல் ஏற்பட்டது, குகையிலிருந்து ஒரு கரடி வரவே..!
டைகர். குதிரை மிரளுகிறது. ஐயா, நான் கீழே..
தொடரும்..



மரகதத் தீவு

''உனக்கு ஏதோ கடிதம் வந்திருக்கிறது'' என்று ஒரு கடிதத்தைக் கிட்டுவிடம் கொடுத்தார் பரமேசுவரன்.

''அயர்லாந்தில் உனக்கு யார் இருக்கிறார்கள்? கடிதத்தில் அயர் தபால் தலை ஒட்டியிருக்கிறதே?''

''அயர்லாந்தில் உள்ள அவன் பேனா நண்பன் ஷான் எழுதியிருப்பான். எனக்குக்கூட ஒரு சிநேகிதி இருக்கிறாள் அயர்லாந்தில். கடிதம் மூலம்தான் நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம். நேரில் பார்த்துப் பழக வேண்டும் என்று எத்தனை ஆசை தெரியுமா எனக்கு? அவள் பெயர் நூ அல்லா ஓடோனெல். ஷானின் தங்கை'' என்றாள் பட்டு. இதற்குள் கடிதத்தைப் படித்து முடித்த கிட்டு ''ஷான்தான் எழுதியிருக்கிறான். என்னை நேரில் காணத் துடிக்கிறானாம்'' என்றான்.

''இருவருக்கும் அங்கு பேனா நண்பர்கள் இருந்தால் நாம் அயர்லாந்துக்குப் போனால் போகிறது. அங்கே இப்போது உலகப் புகழ் பெற்ற குதிரைக் காட்சி நடக்கும். அதையும் காணலாம். அயர்லாந்தின் தலைநகரம் எது தெரியுமா?'' என்று கேட்டார் தாத்தா, தம் மந்திர மெழுகு டப்பியை எடுத்துக் கொண்டே.

''அயர்லாந்தின் தலைநகரம் டப்ளின். இது தெரியாதாக்கும்'' என்றாள் பட்டு.

''அயர்லாந்தின் விமான தளத்தின் பெயர் என் நண்பனின் பெயரைப் போலவே ஒலிக்கும். ஷானான் (Shannon) என்று பெயர்'' என்ற கிட்டு தாத்தாவைப் பார்த்து, ''ம் கிளம்பலாமா?'' என்று கேட்டான். ''நான் ரெடி'' என்றாள் பட்டு. பரமேசுவரன் அவர்களின் புருவங்களில் மந்திர மெழுகைத் தடவினார்.

ஷஸாம்...!


அடுத்த விநாடி...

கிட்டுவும் பட்டுவும் அயர்லாந்தில் இருந்தார்கள். அதுவும் எங்கே? அவர்களுடைய பேனா நண்பர்களின் முன்னால். கிட்டுவும் பட்டுவும் தங்கள் புகைப்படங்களை அவர்களுக்கு அனுப்பியிருந்ததால் திடீரென்று தங்கள் முன்னால் தோன்றிய அவர்களைக் கண்ட நூ அல்லா ஓடோனெல்லும் ஷானும் முதலில் திகைத்தாலும் உடனே சமாளித்துக் கொண்டு, ''ஹல்லோ... கிட்டு அண்ட் பட்டு!'' என்று மகிழ்ச்சியோடு வரவேற்கக் கை நீட்டினார்கள். கிட்டு தன் தோழன் ஷானைக் கட்டிக் கொண்டு அப்படியே தூக்கித் தட்டாமாலை சுற்றினான்.



ஹிஸ் மெஜஸ்டி கிங் பக்! இவர்தான்

''என் மாமா டெர்மாட் இன்று அமெரிக்காவிலிருந்து வரப் போகிறார். அவரை வரவேற்க ஷானன் ஏர்



போர்ட்டுக்குப் போக இருந்தேன். நீ வந்ததில் எனக்கு அதைவிட ரொம்பச் சந்தோஷம்'' என்றான் ஷான். அவர்கள் கூர்க் என்ற ஊரில் இருந்தார்கள். ஷானின் அப்பா ஒரு டாக்டர்.

''ஆமாம், உன் மாமா எதற்காக வருகிறார்?'' என்று கேட்டான் கிட்டு.

''வருஷா வருஷம் அவர் இங்கு வருவது வழக்கம். டப்ளினில் குதிரைக் காட்சியும் சந்தையும் கூடும். உலகிலேயே மிக உயர்ந்த குதிரைகள் எங்கள் ஐரிஷ் நாட்டிலிருந்துதான் வெளி நாடுகளுக்குப் போகின்றன. என் மாமா குதிரைகளை வாங்கத்தான் இங்கு வருகிறார்'' என்றான் ஷான்.

இதற்குள் பட்டுவும் ஓடோனெல்லும் பெண்களுக்கே உரிய சிரிப்பும் கிசுகிசுப் பேச்சுமாகச் சுவாரஸ்யமான சம்பாஷணையில் ஈடுபட்டிருந்தார்கள். ஓடோனெல் தன் குட்டிக் குதிரையைப் பட்டுவுக்குக் காட்டி மகிழ்ந்து கொண்டிருந்தாள். பரமேசுவரன் தாத்தா அவர்கள் பண்ணைக்கு வெளியே பரந்து கிடந்த பசுமையான வயல்களையும் கண்கொள்ளா இயற்கைக் காட்சிகளையும் கண்டு களித்துக்கொண்டிருந்தார்.

ஷான் சொல்லிக் கொண்டிருந்தான் கிட்டுவிடம்: ''இயற்கை அழகுக்குப் பெயர் போனது எங்கள் நாடு. மலைகளும் பசுமையான பள்ளத்தாக்குகளும் புல்வெளிகளும், ஏரிகளும் ஓடைகளும் நிறைந்த நாடு அயர்லாந்து. இதற்கு மரகதத் தீவு என்றுகூட ஒரு பெயர் உண்டு.''

''ஷானும் மாமா டெர்மாட்டும் கில்லார்னே ஏரிக்கு உல்லாசப் பயணம் கிளம்பிவிடுவார்கள். வழியில் பளிங்கு ஓடைகளில் மீன் பிடிப்பது சுவாரஸ்யமாக இருக்கும்'' என்றாள் ஓடோனெல்.


''கில்லார்னேக்கு வடமேற்கே ஐந்து மைலில் கில்லார்கிளின் என்று ஒரு சின்ன நகரம். இங்கு வருஷா வருஷம் ஆட்டுச் சந்தை கூடும். இது ரொம்பப் பிரசித்தமானது. இந்த 'பக் ஃபேர்' ஆகஸ்ட் மாதத்தில் மூன்று தினங்கள் விழாப்போலக் கூடும். இந்தச் சந்தைக்கு உல்லாசப் பயணிகள், குடியானவர்கள், குதிரை வியாபாரிகள் எல்லாரும் வருவார்கள்.''

ஷானைத் தொடர்ந்து ஓடோனெல் அந்தச் சந்தையைப் பற்றி ஒரு சுவாரஸ்யமான செய்தியைக் கூறினாள். இந்தச் சந்தையின் முதல் நாள் விழாவன்று இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நன்கு கொழுத்து வளர்ந்த ஒரு மலை ஆட்டுக்குக் கில்லார்க்ளினின் அழகி தங்கக்கிரீடம் அணிவிப்பாள். ''ஹிஸ் மெஜஸ்டி கிங் பக்'' — முடிசூட்டிக் கொண்டபின் ஒரு லாரியில் முக்கிய தெருக்களில் பவனி வருவார். பவனியின் முடிவில் அவருக்காக அமைக்கப்பட்ட மேடை மீதுள்ள கூண்டில் மலையாட்டை அமர்த்துவார்கள். சந்தைமுடியும் மட்டும் 'கிங் பக்' இங்கிருந்து ஆட்சி நடத்துவார். இது பார்க்க வேடிக்கையாக இருக்கும்.

''நீங்கள் கத்தோலிக்கர்களா? பிராடஸ்டெண்டுகளா?'' என்று கேட்டார் பரமேசுவரன்.

''அயர்லாந்தின் சரித்திரத்தைச் சொன்னால் சுலபமாக உங்கள் கேள்விக்கான விடை கிடைத்து விடும். பதினாறும் நூற்றாண்டிலிருந்து 1921ம் ஆண்டு வரை அயர்லாந்து முழுவதும் பிரிட்டிஷாரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. ஆனால் இன்று அயர்லாந்து சுதந்திரம் பெற்ற தனிநாடு. வடக்கு அயர்லாந்து—அதை உல்ஸ்டர் என்றும் கூறுவர்—இங்கிலாந்தின் ஆளுகைக்கு உட்பட்டது. அது தவிர மற்றவை 'அயர்' — தனிச் சுதந்திர நாடு. 1919 லிருந்து 1921 வரை இங்கிலாந்துடன் போர் புரிந்தே சுதந்திரம் பெற்றது அயர். வடக்கு அயர்லாந்தில் உள்ளவர்கள் பிராடெஸ்டெண்டுகள். நாங்களெல்லாம் ரோமன் கத்தோலிக்கர்கள். அநேகமாக ஐரிஷ்காரர்கள் எல்லோருமே இப்படித்தான்.''

''உங்கள்பள்ளிகளில் உங்களுக்கு ஆங்கிலத்தில் போதிக்



அழகு மறைந்தது

ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் வடக்கு அயர்லாந்தில் ரொம்ப ரொம்ப அழகான ஒரு பெண் வாழ்ந்து வந்தாள். அயர்லாந்துக்குக் கிறிஸ்தவ மதத்தைக் கொண்டு வந்து பரப்பிய புனித பாட்ரிக் பாதிரியார் காலத்துக்குப் பிறகுதான் அந்தப் பெண் தோன்றினாள். பிரிகிட் என்பது அவள் பெயர். பிரிகிட்டின் தகப்பனார் ஒரு பகுதி மக்களின் தலைவர், அரசரைப் போல. பல பிரபுக்களின் குமாரர்கள் பிரிகிட்டை மணக்கப் போட்டியிட்டார்கள். அவள் அத்தனை அழகு. ஆனால் பிரிகிட் யாரையும் மணக்க விரும்பவில்லை. அவள் எண்ணமெல்லாம், குழந்தைகளுக்கு அறிவு போதிப்பதிலும், ஏழைகளுக்கு உதவுவதிலும், நோயாளிகளின் துன்பங்களைத் துடைப்பதிலுமே இருந்தது. வாழ்நாளெல்லாம் இவைகளுக்காகச் செலவிடவே விரும்பினாள் பிரிகிட். ஏனென்றால் அவள் ஒரு நிஜமான கிறிஸ்தவப் பெண்ணாக வாழ ஆசைப்பட்டாள்.

அவள் அப்பாவுக்கு இது பிடிக்கவில்லை. ஆத்திரப்பட்டார். யாராவது ஒரு பிரபுவின் மகனை மணந்து கொண்டே ஆக வேண்டும் என்று வற்புறுத்தினார். நாட்டிலுள்ள இளைஞர்களை எல்லாம் அதற்காகத் தம் அரண்மனைக்கு வரவழைத்தார். பாவம் பிரிகிட்! என்ன செய்வாள்? ஆண்டவனிடம் முறையிட்டு அழுவதைத் தவிர அவளால் வேறு என்ன செய்ய முடியும்? ''கர்த்தரே! நான் உமது குழந்தைகளுக்காக உழைக்கவே விரும்புகிறேன். எனக்கு மண வாழ்வு வேண்டாம். ஆகவே என்னைக் காண வரும் இளைஞர்களின் முன்னால் நான் போகும் போது யாருமே என்னை விரும்பாதபடிக்கு என்னைக் குரூபியாக்கிவிடு'' என்று வேண்டிக்கொண்டாள். அதே போல அழகி பிரிகிட்டைக் காணக் கூடியிருந்த வாலிபர்களின் முன்னால் தந்தையின் வற்புறுத்தலின் பேரில் அவள் போனபோது அந்த அதிசயம் நிகழ்ந்தது. அத்தனை இளைஞர்களும் முகம் சுளித்தபடி அவளைக் காணவும் விரும்பாமல் வெறுப்புடன் எழுந்து வெளியேறினார்கள். ஆண்டவன் அவள் பிரார்த்தனைக்குச் செவி சாய்த்து அவள் முகத்தை அவலட்சணமாக்கி விட்டார். ஆனால் அவர்கள் எல்லோரும் போனதும் மறுபடியும் அவளது பழைய அழகிய உருவம் திரும்பி விட்டது.

இதன் பிறகு பிரிகிட் தந்தையின் அரண்மனையை விட்டுக் கிளம்பி விட்டாள். சேவை மனப்பான்மை கொண்ட சில பெண்களையும் தன்னோடு சேர்த்துக் கொண்டாள். அயர்லாந்தில் கன்னிமாடங்களை அமைக்கலானாள்.

அயர்லாந்தின் மத்தியில் உள்ள கில்டேர் என்ற இடத்தில் ஒரு மடாலயத்தை நிறுவ நினைத்தாள். ஆனால் அந்த இடத்துக்கு உரிமையுடையவ

கிறார்களா? ஐரிஷ் மொழியிலா?'' என்று கேட்டான் கிட்டு.

''அந்தக் காலத்தில் எல்லாரும் ஐரிஷ் தான் பேசி வந்தார்கள். இன்று ஆங்கிலம், ஐரிஷ் இரண்டுமே தேசியமொழி. ஐரிஷ் மொழியை அதிகமாகப் பிரபலப்படுத்த எங்கள் அரசாங்கம் பலவித முயற்சிகளைச் செய்து வருகிறது. அரசாங்கத்தில் உயர் பதவிகள் விரும்புபவர்களுக்கு ஐரிஷ் மொழி தெரிந்திருக்க வேண்டும். ஐரிஷ் பார்லிமெண்டுக்கு டெய்ல் (Dail) என்று பெயர். இங்கு சட்டங்களெல்லாம் ஐரிஷ் மொழியிலேயே நிறைவேற்றப்படுகின்றன. ஆனால் அவைகள் ஆங்கிலம் ஐரிஷ் இரு மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றன. நான் என் பள்ளியில் ஐரிஷ் மொழி பயிலுகிறேன்'' என்றான் ஷான்.

''எங்கள் தலைநகரான டப்ளினில் தெருப் பெயர்கள், அறிவிப்புப் பலகைகள் எல்லாம் ஐரிஷ் மொழியில்தான் இருக்கும். ஆனால் ஜனங்கள் ஆங்கிலத்திலேயே பேசுவார்கள்'' என்றான் ஓடோனெல்.

''உங்கள் நாட்டில் பார்க்க வேண்டிய முக்கியமான இடங்கள் என்னென்ன?''

''இயற்கை வளம் மிக்கது எங்கள் நாடு. ஏராளமான நதிகளும், ஏரிகளும் மலைகளும், புல்வெளிகளும் பார்த்துக் கொண்டே இருக்கலாம். நான் வசிக்கும் கார்க் நகரம் எங்கள் நாட்டின் இரண்டாவது பெரிய நகரம். முதல் பெரிய நகரம் டப்ளின், கார்க் ஒரு துறைமுக நகரம். இங்கிருந்தும் இதை அடுத்த துறைமுக நகரமான கோபிலிருந்தும் (Cobh) ஆண்டு தோறும் ஆயிரக் கணக்கான டன் உருளைக்கிழங்கு, வெண்ணெய், பாலேடு, மற்றும் பண்ணைப் பொருள்கள் எல்லாம் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

ஆடை விரிந்தது!

னை அந்த நாட்டு இளவரசன் மடாலயம் கட்ட இடம் தர மறுத்து விட்டான். அது மட்டுமல்ல. பிரிகிட்டைக் கேலியும் கிண்டலும் செய்தான். கிண்டலாக, ''உன் மேலங்கியைக் கீழே விரி. அது எவ்வளவு பூமியை ஆக்கிரமிக்கிறதோ அத்தனை இடத்தை மட்டுமே உனக்குத் தருவேன்'' என்றான். அவளை அவமானப்படுத்துவதற்காக அவன் இப்படிச் சொன்னான். ஆனால் நடந்தது என்ன?

பிரிகிட் தன் மேலங்கியைக் கழற்றிப் பூமியில் விரித்தாள். உடனே அது வளரலாயிற்று. வேக வேகமாக அதன் பரப்பு பெருகிக் கொண்டே போயிற்று. அந்த நாட்டின் வயல், தோப்பு, நகரம் எல்லாவற்றையும் பிரிகிட்டின் மேலங்கி மூடிக் கொண்டே வந்தது. இளவரசன் நடுநடுங்கிப் போனான். ''போதும், போதும்! அது வளருவதை நிறுத்தச் சொல். நீ கேட்கும் நிலத்தை உனக்குக் கொடுக்கிறேன்'' என்று கத்தினான். அதேமாதிரி பிரிகிட் கேட்ட நிலத்தைக் கொடுத்தான்.

அயர்லாந்தில் புனித பிரிகிட்டின் படங்களோ சிலைகளோ இருக்குமானால் அவைகளில் அவள் ஒரு மாதா கோவிலைக் கையில் ஏந்திக் கொண்டிருப்பது போலிருக்கும். ஏனென்றால் மடாலயங்களையும் மாதா கோயில்களையும் இந்த நாட்டில் நிறுவியது அவள்தான் அல்லவா?

பிரிகிட்டுக்குப் பிராணிகளிடமும் ரொம்பப் பிரியம். மிருகங்களை அன்போடு பேணிப் பாதுகாக்க மக்களுக்குப் போதித்தாள். எனவே



பிரான்ஸ், ஜெர்மனி, பெல்ஜியம் போன்ற நாடுகளில் செயிண்ட் பிரிகிட்டின் உருவங்களை ஒரு பசுவுடனோ, குதிரையுடனோதான் அமைத்திருப்பார்கள்.

- கிட்டு

''எங்கள் தலைநகரம் டப்ளின் ரொம்ப ரொம்ப அழகானது'' என்றான் ஓடோனெல்.

''எங்கள் தலைநகர் டில்லியும்கூடத்தான் ரொம்ப ரொம்ப அழகு'' என்றாள், பட்டு.

''அவரவர் பெருமை அவரவருக்கு.''


''நான் அதற்காகச் சொல்லவில்லை. ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய பார்க் எங்கள் தேசத்தில், அதுவும் டப்ளினில் தான் இருக்கிறது. 1750 ஏக்கரா நிலப் பரப்பில் சோலைகள், புல்வெளிகள். அது மட்டுமல்ல. உலகிலேயே மிகமிக அழகான புத்தகம் எங்கள் டப்ளினில்தான் உள்ளது.''

''அழகான புத்தகமா?''

''ஆமாம். டிரினிடி கல்லூரி வாசகசாலையில் புக் ஆஃப் கெல்ஸ் உள்ளது. மீத் (Meath) மாகாணத்திலுள்ள கெல்ஸ் (Kells) மடாலயத்தில் இருந்த மதகுருக்களால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கையால் எழுதப்பட்டது இப்புத்தகம். கிறிஸ்துவ மதக் கதைகளை ஏராளமான படங்கள் மூலம் விளக்கியிருக்கிறார்கள். எல்லாம் வண்ணப் படங்கள். அந்தப் படங்களின் நிறம் இன்றைக்குத் தீட்டியவைபோல் பிரகாசமாக இருக்கின்றன. அற்புதமான வேலைப்பாடு. இந்தப் புத்தகம் எங்கள் நாட்டில் இருப்பதற்காக நாங்கள் பெருமைப்படுகிறோம்.''

''கடல்படைத் தளபதி நெல்சனின் சிலையைப் பற்றிச் சொல்லு'' என்றான் ஓடோனெல் தன் அண்ணனிடம்.

''நாங்கள் இங்கிலாந்துடன் போரிட்டுச் சுதந்திரம் அடைந்தாலும் எங்கள் தலைநகரில் நெல்சனின் சிலையை வைத்திருக்கிறோம். 166 படிகள் ஏறி அணுகவேண்டும் அவரை. ஒரு பீடத்தின்மீது கம்பீரமாக நிற்கிறார் அட்மிரல் லார்ட் நெல்சன். இதன் மீதிருந்து பார்த்தால் தலைநகர் டப்ளினையே காணலாம். கண்கொள்ளாக் காட்சி.''



கட்டை சுமக்கும் கழுதைக்குட்டி!

''ஆண்டுதோறும் எங்கள் தலைநகரில் நடக்கும் குதிரைக் காட்சியைக் காண உலகின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் வருகிறார்கள். அத்தனை புகழ் பெற்றது டப்ளின் ஹார்ஸ் ஷோ.''

''உங்கள் நாட்டில் நீங்கள் என்னென்ன விளையாட்டுக்கள் விளையாடுவீர்கள்?'' என்று கேட்டான் கிட்டு.

''எல்லா விளையாட்டுக்களும்தான். நெட் பால், ஹாக்கி, டென்னிஸ். ஆனால் எங்கள் தேசிய விளையாட்டு காமோகி (Camogie) அயர்லாந்தில் பல்லாயிரம் ஆண்டுகளாக இந்தக் காமோகி விளையாடப்பட்டு வருகிறது.''

''மலைகள் நிறைந்தது எங்கள் நாடு. தலைநகரிலிருந்து அரை மணி பஸ் சவாரி செய்தால் போதும். ஒரு வீட்டைக்கூடக் காண முடியாத மலைப் பிரதேசத்தை அடைந்து விடலாம். நகர எல்லைக்குள்ளேயே அழகான கடற்கரைகளைக் காணக்கூடிய அதிசயத்தை டப்ளினில்தான் பார்க்க முடியும். இன்றைய நாகரிக யுகத்திலும் குதிரைகளுக்குப் புகழ்பெற்ற நாங்கள் கழுதைகளையும் புறக்கணிக்கவில்லை. மலைகளிலிருந்து, எரிபொருளுக்குக் 'கட்டைகள் வெட்டி அதைக் கழுதைகளின் முதுகில்தான் கொண்டு வருவோம். சிறு வண்டிகளையும் இந்தக் கழுதைகள் இழுக்கும். ஆட்டு ரோமத்திலிருந்து நாங்களே கம்பளி தயார் செய்து கொள்வோம். பெண்கள் தங்கள் உள் பாவாடைகளைத் தாங்களே கண்களைப் பறிக்கும் வண்ணங்களில் தயாரித்துக் கொள்ளுவார்கள்.

''டப்ளின் மிருகக் காட்சிசாலை புகழ் பெற்றது. உலகில் உள்ள எல்லா நாட்டு மிருகக் காட்சிகளுக்கும் சிங்கங்கள் இங்கிருந்துதான் அனுப்பப்படுகின்றன. எந்த நாட்டு மிருகங்களானாலும் பல்கிப் பெருகுவதற்கான சீதோஷ்ண நிலையைக் கொண்டது எங்கள் நாடு. மிதமான மழை, உஷ்ணம், பசுமையான புல்வெளிகள், மலைப் பிரதேசங்கள், ஏரிகள், ஓடைகள்...'' பேசிக் கொண்டே வந்த ஷான் சட்டென்று தன் பேச்சை நிறுத்தினான். பிறகு ''நான் என் நாட்டின் பெருமையைக் கூறி உன்னைப் போரடிக்கிறேனா, கிட்டு?'' என்று கேட்டான்.

''அதெல்லாம் இல்லை. நீ எங்கள் நாட்டுக்கு வந்தால் நானும்தான் இப்படி என் நாட்டின் பெருமையைக் கொட்டிக் கவிழ்ப்பேன்'' என்றான் கிட்டு.

ஓடோனெல் உடனே தன் அண்ணாவிடம் ''ஷான், அவர்களை மீன்பிடிக்க ஓடைக்கு அழைத்துப் போகலாம். பிக்னிக் போன மாதிரியும் இருக்கும். கேக், பிஸ்கட், காப்பி எல்லாம் கூடையில் தயாராக வைத்து விட்டேன். கிளம்பலாம்'' என்றாள்.

கிட்டுவுக்கும் பட்டுவுக்கும் பரமேசுவரன் தாத்தாவின் ஞாபகம் இத்தனை நாழி கழித்துத்தான் வந்தது. பேனா நண்பர்களுடன் நடத்திய பேச்சு அத்தனை சுவாரஸ்யமாக இருந்ததால் தாத்தாவை மறந்தே போனார்கள்.

ஆனால் தாத்தா மட்டும் என்னவாம்? ஷானின் அப்பாவுடன் அல்லூரைப் பற்றிப் பல விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டிருந்தார்.

கிட்டுவும் பட்டுவும் ஷானுடனும் அவன் தங்கையோடும் படகில் மீன் பிடிக்கப் போய், அப்படியே ஒரு மலைமீது ஏறி இயற்கைக் காட்சிகளை ரசித்து மகிழ்ந்து பின் திரும்பினார்கள். அப்போது ஷான் டப்ளின் பற்றிய இன்னொரு விஷயம் கூறினான். உலகிலேயே மிகச் சிறிய துறைமுகப் பட்டினம் டப்ளின் தானாம். பல நூறு வருஷங்களுக்கு முன்னர் இத்துறைமுகம் கட்டப்பட்டபோது வேல்ஸுக்குப் பிரயாணப்பட்ட அந்தக் காலத்துக் கப்பல்களெல்லாம் சிறியவைகளாகவே இருந்தன. சிறிய கப்பல்களுக்கேற்ற சின்னத் துறைமுகம் என்று கூறிச் சிரித்தான் ஷான். பேனா நண்பர்களிடம் பிரியா விடையும் பெற்றார்கள், கிட்டுவும் பட்டுவும்!

பரமேஸ்வரன் தாத்தா அவர்கள் புருவத்திலிருந்த மந்திர மெழுகைத் துடைத்தார். கிட்டுவும் பட்டுவும் தங்கள் வீட்டுக் கூடத்தில் இருந்தார்கள். அப்போது இரவு மணி ஒன்பது.

''நீங்கள் மீன் பிடிக்கப் போன போது ஷானின் அப்பா எனக்கு ஒரு அழகான கதை சொன்னார்'' என்றார் பரமேசுவரன் தாத்தா.

''அதை எங்களுக்கும்சொல்லுங்கள்'' என்றார்கள் கிட்டுவும் பட்டுவும்.

தாத்தா கூறிய புனித பிரிகிட்டினுடைய கதையைத்தான் நீங்கள் முன் பக்கத்தில் படித்திருப்பீர்களே! **—விகேயெம்**

கோலா

கோடைகாலத்துக்கு ஏற்ற குளிர் பானம் (கோகோ கோலா) என்று எண்ணிவிடாதீர்கள். கோலா என்பது அபூர்வமான அழகான ஒரு பிராணி. விசித்திரமான பிராணிகளின் தாயகமான ஆஸ்திரேலியா தான் இந்தக் கோலாக் கரடியின் தாயகம். பார்வைக்குக் கரடி போல் இருந்தாலும் இது கரடி இனமில்லை. மார்ஸுபியல் (Marsupial) என்றால் என்ன என்று உங்களுக்குத் தெரியுமில்லையா? வயிற்றில் பையை உடைய பிராணிகளுக்கு மார்ஸுபியல் என்று பெயர். கோலாவும் ஒரு மார்ஸுபியல்தான். ஆனால் ஒரு விசேஷம், இதன் பையின் திறந்த வாய் வால் பக்கம் இருக்கும் — தலைப் பக்கமாக இருக்காது. இதற்குக் கோலா என்று ஏன் பெயர் வந்தது? ஆஸ்திரேலிய ஆதிவாசிகளின் மொழியில் கோலா என்றால் ''எதையும் குடிக்காத — நீர் அருந்தாத ஜந்து'' என்று பொருள். கோலா தண்ணீரே குடிக்காது. அதன் பெயரிலான குளிர் பானத்தை நிறையக் குடிக்கிறார்கள்.

கோலாவின் உணவு யுகலிப்டஸ் மரத்தின் இலை, கோந்து, பனித் திவலைகளின் ஆவி ஆகியவைதான். யுக்லிப்டஸ் மரக் காடுகளில்தான் இது வாழும். வேறு இடங்களில் இது வாழ்வதில்லை. அதனால்தான் உலகில் உள்ள மிருகக்காட்சிச் சாலைகளில் கோலாவைக் குழந்தைகளின் காட்சிப் பொருளாக்க முடிவதில்லை. அமெரிக்கர்கள் இந்த விதி முறையையும் மாற்றி அமைத்து விட்டார்கள். தென் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள சாண்டியாகோ மிருகக் காட்சிச் சாலைக்குள் பெருஞ் செலவு செய்து ஒரு யுகலிப்டஸ் வனத்தையே உருவாக்கி அங்கு இந்தக் கோலாக்களைக் கொண்டு வந்து வளர்த்துப் பெருக்கி இருக்கிறார்கள்.

ஒரு கோலா ஒரு நாளைக்கு இரண்டரைப் பவுண்டு யுகலிப்டஸ் இலைகளைத் தின்னும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் குட்டி போடும். பிறந்த குட்டி மூன்றங்குல நீளமே இருக்கும். கருத்தரித்து முப்பத்தைந்து நாட்களில் குட்டி பிறக்கும். பிறகு தாயின் வயிற்றுப் பையிலேயே குட்டி இரண்டு மாத காலம் இருக்கும். இதன் பிறகு அம்மாவின் முதுகில் அதைக் கெட்டியாகக் கட்டிக் கொண்டு சில காலம் இருக்கும். கொஞ்சம் கொஞ்சமாக தானாக இயங்கவும் இரை தேடவும் கற்றுக் கொள்ளும். அதுவரையில் தாயின் முதுகுதான் அதன் இருப்பிடம்.



நன்கு வளர்ந்த கோலா முப்பது அங்குல நீளம் இருக்கும். இவை இருபது ஆண்டுகள் வரை வாழக் கூடியவை. இரவில்தான் இரை தேடி அலையும். பகலெல்லாம் கவண் போன்று பிரிந்துள்ள கிளைகளில் அமர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும். இதன் அழகிய, மிருதுவான, பட்டுப் போன்ற பழுப்பு நிற உடலே இதற்கு விரோதி. இதன் தோலுக்காக மனிதர்கள் இதைக் கொன்று குவித்ததினால் இந்த இனமே மறைந்துவிடுமோ என்ற நிலை உருவாக, ஆஸ்திரேலிய அரசாங்கம் இதை யாரும் வேட்டையாடக் கூடாது என்று தடை விதித்திருக்கிறது. இவை வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கினால்தான் மிருகக் காட்சி சாலைகளுக்குக் கோலாக்களை அனுப்புகிறார்கள். அதனால்தான் இதைப் போல் பொம்மைகளை உருவாக்கிக் குவிக்கிறார்கள், பொம்மைக் கலைஞர்கள். டெடி பேர் (Teddy Bear) என்றால் உங்களுக்குக் கொழு கொழு வழு வழு என்ற அழகான கோலா பொம்மையின் நினைவு வருமே!


சரியான வேளையில் சரியான வேலை...





சிரிக்கச் சிரிக்க..!
சாமா
ஏப்ரல்
அப்பாடா! பள்ளிக்கூடம் லீவு விட்டாச்சே!
ஜூன்
அம்மாடி! பள்ளிக்கூடம் திறந்தாச்சு!
அவர்: ஆயிரம் பாடுபட்டு ஒண்ணுங் கிளாஸ்-க்கு அட்மிஷன் வாங்கிண்டு வந்திருக்கேன். உன்னைக் கட்டிண்டு பள்ளிக்கூடம் போக மாட்டேங்கிறானே?
பாட்டி: எனக்கும் அதே கிளாஸ்-க்கு ஒரு அட்மிஷன் வாங்கிண்டு வந்துடு. அங்கு வந்து என்னைக் கட்டிண்டு உட்கார்ந்திருக்கட்டும்.
உபாத்தியாயர்: நீ துடைத்த லட்சணமா இது? இங்கே ஒரே மணலா இருக்கு.
பையன்: அது ஸஹாரா பாலைவனமாச்சே சார்!
தாத்தா! தாத்தாவ்!
ஹெட்மாஸ்டர் (மனைவியிடம்): அவனைத் தாத்தா தாத்தான்னு கத்தாமல் இருக்கச் சொல்லு. வந்தவர்கள் காதில் விழுந்தா ஹெட்மாஸ்டர் தம் பேரனுக்கு அட்மிஷன் கொடுத்தார்னு புகார் கிளம்பும்.
"உங்க பையன் அட்மிஷன் ஒரு பக்கம் இருக்கட்டும்: அவனுடைய அந்த இரண்டு பக்கக் கிருதாவையும் முதல்லே எடுக்கச் சொல்லுங்கோ."
"சொன்னாக் கேட்க மாட்டேங்கறான்!"
"நான் சொன்னா நீங்க கேட்பீங்க இல்லையா?"
"கேட்பேன்....."
"முதல்லே உங்க கிருதாவை எடுங்க!"

மூளைக்கு வேலை



முக்கோணங்கள்

● படத்தில் கண்டுள்ளபடி பதினாறு தீக்குச்சிகளால் எட்டு முக்கோணங்கள் அமைக்க வேண்டும். அவைகளில் நான்கு குச்சிகளை எடுத்த பிறகு நான்கு முக்கோணங்களே இருக்கும்படி செய்ய வேண்டும். முடியுமா? முயன்று பாருங்கள். —பாண்டித்துரை


இவை என்ன?

● இது செலவாவது உங்களுக்குத் தெரியாது. ஆனால் இதைச் செலவழிக்காமல் இருக்கவும் முடியாது. அது என்ன?

● இதை நாம் உபயோகப்படுத்தும்போது இது நிரம்பி யிருக்கும், உபயோகப்படுத்தாத போது இது காலியாக இருக்கும். அது என்ன?


— எஸ். ரமேஷ்

ஆப்பிள்களைப் பங்கிடு



ஒரு பெட்டியில் நிறைய ஆப்பிள் பழங்கள் இருந்தன. இதை எப்படிப் பங்கிடுவது என்று கொண்டு வந்த மூவருக்குள்ளும் தகராறு வந்தது. கடைசியில் இதைக் கொண்டு வர மிகவும் கஷ்டப் பட்டவனுக்கு அதிகமாகவும் அடுத்தடுத்து உள்ளவர்களுக்குப் படிப்படியாகக் குறைத்தும் எடுத்துக் கொள்வது என்று முடிவாயிற்று. அதன்படி: முதலில் எல்லா ஆப்பிள்களையும் மூன்று பங்கு போட்டு அதில் ஒரு பங்கை முதல்வன் எடுத்துக் கொண்டான். மீதியுள்ளதை மறுபடியும் மூன்று பங்கு போட்டு இரண்டாமவன் அதில் ஒரு பங்கை எடுத்துக் கொண்டான். எஞ்சியுள்ளதை மீண்டும் மூன்று பங்கு போட்டு மூன்றாமவன் அதில் ஒரு பங்கு எடுத்துக் கொண்டான். அதன் பின் இருந்த பழங்களையும் மூன்று பங்கு போட்டார்கள். மூவரும் ஆளுக்கொரு பங்கை எடுத்துக் கொண்டார்கள். மீதமாகப் பழங்கள் எதுவும் இல்லை. அப்படியென்றால் பெட்டியில் எவ்வளவு பழங்கள் இருந்திருக்க வேண்டும்?

விநோத எட்டு



● மொத்தம் 8 எண்களை எடுத்துக் கொள்ளுங்கள். இதைக் கூட்டலாம், கழிக்கலாம், வகுக்கலாம், பெருக்கலாம். எப்படிச் செய்தாலும் சரி. ஆனால் மொத்தம் எட்டு 8—கள் மட்டும்தான் உபயோகிக்க வேண்டும். எப்படிச் செய்தால் மொத்தம் கூட்டுத் தொகை 1,000 வரும்?

—இரா. சீனிவாசன்

யாரோ அவர் யாரோ?




● ஓர் ஊரில் ஒரு மாமரம். அந்த மாமரத்தில் ஒரு மாங்காய். அதைப் பார்த்தவர்கள் இரண்டு பேர்கள். பறித்தவர்கள் ஐந்து பேர்கள். பங்கு போட்டவர்கள் பத்துப் பேர்கள். ஆனால் அதைத் தின்றவர்களோ முப்பத்திரண்டு பேர்கள். அவர்கள் யார்?

— என். ராதாகிருஷ்ணன்

விடைகள்:

முக்கோணங்கள்: இவை என்ன?: காலம், பூட்ஸ். ஆப்பிளைப் பங்கிடு: 81 பழங்கள்



விநோத எட்டு:

888
88
8
8
8
——
1000

யாரோ அவர் யாரோ? மனிதன்
பார்த்தவர்கள் - இரண்டு கண்கள், பறித்தவர்கள் - ஐந்து விரல்கள், பங்கு போட்டவர்கள் - பத்து விரல்கள், தின்றவர்கள் - 32 பற்கள்.

குளிர் தரும் நிலா

ஒரு தாயாருக்கு நான்கு குழந்தைகள் இருந்தார்கள். சூரியன், சந்திரன், வருணன், வாயு என்று அவர்களுக்குப் பெயர். ஒரு நாள் இந்த நான்கு குழந்தைகளையும் பெரிய பணக்காரர் ஒருவர் தம் வீட்டில் நடக்க விருக்கும் விருந்துக்கு வருமாறு அழைத்திருந்தார். குழந்தைகள் நால்வரும் விருந்துக்குப் போகப் புறப்பட்டார்கள். அப்பொழுது அவர்களுடைய தாயார் அவர்களிடம், 'விருந்தில் உங்களுக்குப் பரிமாறும் பட்சணங்களில் எனக்குப் பிடித்தமான பட்சணங்கள் ஏதாவது இருந்தால் கொண்டு வாருங்கள்'' என்று சொன்னாள். எந்தக் குழந்தை தன்னிடம் பிரியமாக இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவே அப்படிச் சொன்னாள்.

குழந்தைகளும், ''சரி... சரி...'' என்று தலையைப் பலமாக ஆட்டிவிட்டு விருந்துக்குச் சென்றார்கள்.

குழந்தைகள் நால்வரும் விருந்தில் கலந்து கொண்டார்கள். குழந்தைகளை முதல் பந்தியிலேயே உட்கார வைத்தார் அந்தப் பணக்காரர். விருந்தில் இனிப்புப் பண்டங்கள், பழங்கள் எல்லாம் போட்டார்கள். சந்திரன் அவற்றை இலையில் போட்டுக் கொள்ளாமல் கையில் வைத்துக் கொண்டான். மற்ற மூன்று பேர்களும் எல்லோரையும் போல் நன்றாகப் பலகாரங்களைச் சாப்பிட்டு இலையைக் காலி செய்துவிட்டார்கள். விருந்து முடிந்ததும் சூரியன், சந்திரன், வருணன், வாயு ஆகிய நான்கு குழந்தைகளும் வீட்டுக்குத் திரும்பினார்கள். வீட்டுக்கு வந்ததும் அவர்களுடைய தாய், அவர்களைப் பார்த்து, '' எனக்கு என்ன கொண்டு வந்தீர்கள்?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள். உடனே சூரியன், '' அம்மா! குழந்தைகளுக்கு இனிப்புப் பட்சணமே போடவில்லை '' என்று சொல்லிக் கொண்டே அந்த இடத்தை விட்டு வேகமாக நடந்தான்.


வருணன், ''மிகவும் கொஞ்சமாகத் தான் இலையில் போட்டார்கள். அது எனக்கே போதவில்லை. நானே சாப்பிட்டுவிட்டேன்'' என்றான்.

வருணனுக்குப் பக்கத்திலிருந்த வாயு, ''நான் உனக்குக் கொண்டு வரவேண்டும் என்பதையே மறந்து விட்டேன்'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

சந்திரன் சிரித்துக் கொண்டே, ''அம்மா! இதோ விருந்தில் போட்ட இனிப்புக்களையும் பழங்களையும் உனக்காக நான் கொண்டு வந்திருக்கிறேன். சாப்பிடுங்கள் அம்மா!'' என்றான்.


சந்திரன் கூறியதைக் கேட்டதும் அவர்களுடைய தாயாருக்கு மனம் குளிர்ந்தது. ''சந்திரா! நான் உங்களைச் சோதிப்பதற்காகவே விருந்தில் எனக்குப் பிடித்தமான இனிப்புப் பண்டங்கள் போட்டால் அதைக் கொண்டு வரச் சொன்னேன். இந்தா நீயே சாப்பிடு. சந்திரா! நீதான் மிகவும் நல்லவன். உன் மனம் போலவே உன் ஒளியும் குளிர்ச்சியாக இருக்கட்டும். உன் முகத்தைப் பார்த்தாலே மற்றவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படட்டும்'' என்று அவர்களின் தாயார் வாழ்த்தினாள். கோடைக் காலத்தில் ''சூரியன் இப்படிக் கொளுத்துகிறானே. வெளியில் தலை காட்ட முடியவில்லையே !'' என்று அலுத்துக் கொள்கிறோம். மழை தொடர்ந்து மூன்று நாட்கள் பெய்தால், ''இந்தப் பாழாய்ப்போன மழை நிற்கமாட்டேன் என்கிறதே!'' என்று வருணனை வைகிறோம். காற்றும் அதிகமானால், ''இந்தப் பேய்க் காற்று எப்போது நிற்குமோ?'' என்று வாயுவுக்கும் வசைகள் கிடைக்கின்றன. ஆனால், சந்திரனை மட்டும் யாரும் திட்டுவது இல்லை. அதற்குக் காரணம் தெரிந்து கொண்டீர்களில்லையா? நீங்களும் நல்ல பெயர் வாங்க வேண்டுமானால் உங்கள் அம்மாவின் மனம் குளிரும்படி காரியம் செய்யுங்கள்.

பொன்மலை பரிமளம்



நான் பிறந்தபோது எனக்கு மூன்று கால்கள்!

கிருஷ்ணவேணி



வழக்கம் போல, யாருமில்லாத அமைதியான பகல் வேளையில் ரமணியும் உஷாவும் 'ஆட்டோ சாரி'ன் அருகே போனார்கள்.

"வாங்க" என்று கனைத்துக் குரலைச் சரி செய்து கொண்டே வரவேற்ற ஆட்டோ, "உங்க கோடை விடுமுறையெல்லாம் எப்படி?" என்று கேட்டது.

"விடுமுறை போனதே தெரியல்லே. இன்னும் ஒரு வாரத்திலே பள்ளிக்கூடம் திறந்துடறாங்க. அது சரி... நீ அப்பா கூட நீண்ட பிரயாணம் போயிட்டே. எங்களுக்குத்தான் பொழுதே போகல்லே. நீ பிறந்து வளர்ந்த கதையைச் சொல்றேன்னு அன்னிக்குச் சொன்னியே, நினைவு இருக்கா? அதுக்காகத்தான் உன்னையே எதிர்பார்த்துக்கிட்டு இருக்கோம்" என்றார்கள் உஷாவும் ரமணியும் கோரஸாக.

"நான் மறந்துடல்லே! இன்னிக்குச் சொல்லிட்டாப் போச்சு" என்று ஆட்டோ கதை சொல்லலாயிற்று.

"மனிதன் நாகரிகம் அடைய அடைய வசதிகளை விரும்பலானான். தான் செய்யும் காரியங்களைச் செய்ய யந்திரங்களைச் செய்ய முற்பட்டான். நீராவியின் சக்தியினால் இயங்கும் யந்திரங்கள் தோன்றின..."

"1769ம் ஆண்டில் பிரஞ்சு பீரங்கிப் படை அதிகாரி ஒருவர் பீரங்கிகளை இழுத்துச் செல்லத் தானாக இயங்கும் ஒரு வண்டியைத் தயாரித்தார். இதுதான் என் தோற்றத்தின் முதல் கட்டம். அந்த அதிகாரியின் பெயர் நிக்கோலஸ் குகாட் (Nicolas cugnot) என்பது. இந்த வண்டி நீராவியின் சக்தியால் இயங்கக் கூடியது. இதற்கு மூன்றே சக்கரங்கள்தான். இது நான்கு பிரயாணிகளைச் சுமந்து போக வசதியாக அமைக்கப்பட்டிருந்தது. முன்னாலுள்ள ஒற்றைச் சக்கரத்தின் மேலே எஞ்சினும் பாய்லரும் பொருத்தப்பட்டிருக்கும். இதை ஓட்டிச் செல்வது கஷ்டம். இந்த விநோதமான வாகனத்தைப் பாரிஸ் நகர வீதியில் ஓட்டிக் காண்பித்த குகாட் அதை ஒரு சுவரில் கொண்டு போய் மோதி விட்டார்! தானாக இயங்கி வீதியில் ஓடும் முதல் வாகனத்தை உருவாக்கியவருக்குச் சாலை விபத்துக்களுக்காக முதன் முதலில் சிறைச்சாலைக்குப் போன பெருமையும் கூடவே கிடைத்தது! மணிக்கு மூன்று மைல்கள் ஓடிய இந்த வாகனம் இன்றைக்கும் பாரிஸில் உள்ள கண்காட்சி சாலையில் வைக்கப் பட்டிருக்கிறது."

"ஆட்டோ சார்! குகாட்டின் வண்டி நீராவி யந்திரம்தான் இல்லையா? உங்களுக்கும் அதற்கும் எப்படி...?" என்று புருவத்தை உயர்த்தினான் ரமணி.

"அது நீராவியின் சக்தியால் இயங்கியதுதான். சாலைகளில் தானே இயங்கி ஓடும் யந்திர அமைப்பு வண்டியின் பிறப்பிலிருந்துதானே நான் பிறந்தேன்? குதிரைகள் இழுக்காத வண்டிகள் நகர வீதிகளில் ஊர்வது சட்ட விரோதமென்றும் அத்தகைய வண்டிகளின் முன்னால் ஒருவர் சிவப்புக் கொடியை வீசிக்கொண்டு போக வேண்டும் என்றெல்லாம் சட்டம் இயற்றினார்கள், அந்தக் காலத்தில்."


"ஆச்சரியமாக இருக்கிறதே. ஓடும் வண்டிகளின் முன்னால் கொடி காட்டிக் கொண்டு மனிதன் ஓடுவதாவது?" என்றாள் உஷா.

"இன்றைக்கு நினைத்தால் விநோதமாக இருக்கும்தான். ஆனால் அன்றைய நிலை அதுதான். அது போகட்டும். இப்படி நீராவியால் இயங்கும் யந்திரங்களில் முன்னேற்றம் ஏற்பட்டதும் ஆராய்ச்சியாளர்களின் கவனம் வேறு வகை யந்திரங்களை உருவாக்குவதில் திரும்பியது. சிலிண்டரின் உள்ளே எரிபொருளும் காற்றும் கலந்து எரிவதனால் ஏற்படும் சக்தியைக் கொண்டு இயங்கும் யந்திரங்கள் தோன்றலா

யின. இதற்கு 'இண்டர்னல் கம்பஸ்ச்சன்' (Internal Combustion) யந்திரங்கள் என்று பெயர்.''

''நீங்கள் ஓடுவது இந்த இண்டர்னல் கம்பஸ்ச்சன் முறையில்தானே?'' என்றாள் உஷா.

''ஆமாம். 1823ம் ஆண்டில் எரி பொருளை ஓட்டும் சக்தியாக மாற்றி இயக்கும் இயந்திரங்களின் தோற்றம் ஏற்பட்டது. சாமுவேல் பிரவுன் என்பவர் ஒரு யந்திரத்தைத் தயாரித்தார். 'இன்டர்னல் கம்பஸ்ச்சன்' யந்திர சரித்திரத்தின் முதல் படி பிரவுனுடைய யந்திரம்தான். சிலிண்டரின் உள்ளே சூனிய நிலையை ஏற்படுத்தும் விசையைக் கண்டார் பிரவுன். இதைத் தொடர்ந்து 1833ல் அழுத்தத்தைப் பயன்படுத்தி யந்திரங்களை உருவாக்கினார் டபிள்யூ. எல். ரைட் என்பவர். காலப் போக்கில் இப் புதிய யந்திரங்களில் பல அபிவிருத்திகளும் ஏற்பட்டன. இதற்காக உழைத்தவர்கள் லெனார், ஹுகான், பார்ஸாண்டி, மட்டுனி ஆகியோர்.



1862ல் அல்பான்ஸோ டி ரோசாஸ் என்ற பிரெஞ்சுக்காரர் இண்டர்னல் கம்பஸ்ச்சன் யந்திரத்தின் அமைப்பு, வேலை முறைகளைப் பற்றித் திட்ட வட்டமான ஓர் ஆராய்ச்சி நூலை வெளியிட்டார். அவருடைய தத்துவங்களின்படிதான் இன்றைய யந்திரங்கள் இயங்குகின்றன.


அவருடைய காலம் வரை இத்தகைய யந்திரங்கள் தொழிற்சாலைகளுக்குள் மட்டுமே இயங்கி வந்தன. வீதிகளில் ஓடும் வண்டிகள் உருவாக்கப்படவில்லை. 1867ல் ஜெர்மனியில் நிக்கோலாஸ் ஓட்டோ என்பவரும் லாங்கன் என்பவரும் கொலோன் நகரில் இண்டர்னல் கம்பஸ்ச்சன் தத்துவப்படியான யந்திரங்கள் கொண்ட வண்டிகளைத் தயாரிக்க ஒரு தொழிற்சாலையை நிறுவினார்கள்.


மேலே: நிக்கோலஸ் குகாட் தயாரித்த வண்டி.

வலது பக்கம் மேலிருந்து கீழாக: 1886ல் டைம்லர் தயாரித்த கோச்சு வண்டி மாடல் - 1887ல் கார்ல் பென்ஸ் உருவாக்கிய மூன்று சக்கர மோட்டார் - 1894ல் பான்ஹார்டும் லெவாசரும் என்ஜினை முன்னுக்குக் கொண்டு வந்து அமைத்த வண்டி - ஹென்றி போர்டு தயாரித்த மாடல் T க்கு அப்போது கதவுகள் கிடையாது.









''இன்றைய காரோடு ஒப்பிடும் போது பென்ஸின் கார் விநோதமாகத்தான் இருக்கும் இல்லையா?'' என்றான் ரமணி.

''ஆமாம். அன்று அது ஒரு புரட்சிகரமான அமைப்பு. ஏக சத்தம்,, ஏகப் புகை, ஒரே நாற்றம். இவ்வளவு இருந்தாலும் கூட இன்றைய நாகரிகக் கார்களின் அமைப்புக்கு அடிப்படை பென்ஸின் அன்றைய கண்டுபிடிப்புத்தான். அதன் பிறகு எவ்வளவோ முன்னேற்றங்கள், அபிவிருத்திகள்.''

''மூன்று சக்கர வண்டியாயிற்றே? பென்ஸினுடையது? அது எப்படி இன்றைய காருக்கான முன்னோடியாக முடியும்?'' என்று கேட்டாள் உஷா.

''பென்ஸூம் முதலில் நான்கு சக்கர வண்டியில்தான் தமது ஒற்றை ஸிலிண்டர் காஸோலீனை இணைத்தார். ஆனால் அதைத் தாம் விரும்பியபடி செலுத்த முடியாததினால்தான் பிறகு மூன்று சக்கர வண்டியில் என்ஜினை இணைத்து வெற்றி கண்டார். 1877ம் ஆண்டில் பென்ஸின் கம்பெனி ஒரு நாளைக்கு 500 ஆட்டோக்களைத் தயாரிக்கும் அளவுக்கு வளர்ந்து விட்டது.''

''பென்ஸ்தான் முதல் காஸோலைன் வண்டியைக் கண்டுபிடித்தவரா?''

''என் தோற்றத்துக்கு ஒருவரை மட்டும் காரணமாக்க முடியாது. பல்வேறு நாடுகளிலும் ஒரே காலத்தில் என்னை உருவாக்கப் பலபேர் முயன்று வந்தார்கள். ஒவ்வொருவருமே தங்கள் தங்கள் ஆராய்ச்சிப்படி; ஆனால் ஒரு குறிப்பிட்ட நியதியில் என்னை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள். கொஞ்ச நேரம் முன்பு **நிக்கோலஸ் ஓட்டோ** என்பவரைப் பற்றிக் கூறினேனே, நினைவிருக்கிறதா? ஜெர்மனியிலுள்ள கொலோன் நகரிலிருந்த தொழிற்சாலை அதிபர். அவரிடம் **காட்லிலப் டைம்லர்** என்பவர் பிரதம என்ஜினீராக இருந்தார். அங்கு தயாராகும் யந்திரங்களின் அபிவிருத்தியை நன்கு அறிந்திருந்தார் டைம்லர். பிறகு அந்தக் கம்பெனியின் டைரக்டராகவும் ஆனார். தமது நாற்பத்தெட்டாம் வயதில் கம்பெனியிலிருந்து ஓய்வு பெற்றுத் தம் சொந்த அமைப்பில் கனமற்ற ஆனால் அதிக சக்தி வாய்ந்த யந்திரங்களைத் தயாரிக்கலானார்.

பென்ஸ் வெற்றி கண்ட அதே 1885ம் ஆண்டில் டைம்லரும் மரத்தாலான பிரேம் கொண்ட மோட்டார் சைக்கிளை உருவாக்கிக் காஸோலைனால் ஓட வைத்தார். அடுத்த ஆண்டே இந்த மோட்டார் சைக்கிளை நான்கு சக்கரம் கொண்ட மோட்டார் வண்டியாக மாற்றி அமைத்தார். ஓர் ஆங்கிலக் கம்பெனி டைம்லர் வண்டிகளை உருவாக்க நிறுவப்பட்டது. 1897ல் டைம்லரின் முதல் வண்டி விற்பனைக்கு வந்தது. டைம்லரின் வண்டிகள் பெரியவை, நேர்த்தியானவை. பிரிட்டிஷ் அரச குடும்பத்தினரிடம் எப்போதும் ஒரு டைம்லர் வண்டி இருக்கும்.

''ஆட்டோவின் முன்னால் யந்திரத்தை அமைத்தது எப்போது, யாரால் என்று சொல்ல வில்லையே?'' என்று கேட்டான் ரமணி.

''**ரேனி பான்ஹார்டு, எமிலி லெவாஸர்**'' என்ற இருவர். பிரஞ்சுக்காரர்கள் காரியேஜ் செய்வதில் கை தேர்ந்த இவர்கள் 1894ம் ஆண்டில் மோட்டார் வண்டியின் என்ஜினை முன்னால் அமைத்து, அதற்கு ஒரு மூடியையும் போட்டவர்கள் இவர்கள் தான்.

''இதன் பிறகு என் உருவத்தில்தான் எத்தனை விதமான மாறுதல்கள்? என்னைச் சிலர் கோச் வண்டியைப் போல் தயாரித்தார்கள், கதவுகளை இல்லாத கட்டை வண்டி போலச் சில காலம் இருந்தேன். சிலர் எனக்கு முக்காடிட்டார்கள். ஒருவர் உட்காருவது, இருவர் அமர்ந்து போவது, என் தலைக்கு மேலே அரசர்களுக்குக் குடை பிடிப்பார்களே அப்படிக் குடை — என்று எப்படி எப்படி எல்லாமோ என்னை அழகுபடுத்தி ஆனந்தப்பட்டார்கள். அதே சமயத்தில் என் வேகமும் கூடிக்கொண்டே வந்தது. என்னை இயக்குவது எளிதாக்கப்பட்டது.''

''மோட்டார் — அதாவது ஆட்டோவின் சரித்திரத்தில் ஹென்றி போர்டு எத்தகைய இடத்தைப் பெறுகிறார்?'' என்று கேட்டான் ரமணி.

''அமெரிக்கரான ஹென்றி போர்டு ஆட்டோ தயாரிப்பில் தலைசிறந்தவராக விளங்கினார். பல மாடல்களை உருவாக்கி மக்களுக்கு வழங்கினார். பெரும் பொருள் ஈட்டினார். பிறந்த குழந்தையை வளர்த்த பெருமைதான் அவருக்கு. பெற்ற பெருமையை அவருக்குத் தர முடியாது. இன்றைய நாகரிகக் கார்களுக்கு போர்டைப் போலப் பலரின் உழைப்பு பயன்பட்டிருக்கிறது. தோற்றம், அமைப்பு, இயக்கம், வேகம், செயல் முறை, எளிமை ஆகிய பல அம்சங்களில் ஆதிக் கார் படிப்படியாக மாற்றங்களைக் கண்டு வந்திருக்கிறது. முன்பே சொன்னேனே அதுபோல எத்தனை மாடல்கள்? எத்தனை அமைப்புகள்? அப்பப்பா! என் வளர்ச்சியையே ஒரு தனிக் கண்காட்சியாக வைக்கலாம்'' என்று பெருமைப்பட்டுக் கொண்டது ஆட்டோ

பதினைந்து ஆண்டுகளில் 50,000 வண்டிகளைத் தயாரித்தார்கள். ஆனால் இவர்கள் தயாரித்த வண்டிகளின் யந்திரம் மிகப் பெரியதாகவும், ரஸ்தாவில் செல்லும் போது கவர்ச்சியற்றதாகவும் இருந்தது. ஆனால் சிறப்பான முறையில் ஆட்டோக்களுக்கான ஆரம்பத்தை உருவாக்கியவர்கள் **சிக்ஃபிரட் மார்கஸ்** என்ற ஆஸ்திரியா நாட்டவரும் (1875) இத்தாலியரான **முர்னிகாட்டி** என்பவருமாவர். என்ன உங்களிடமிருந்து எந்த விதமான கேள்வியையும் காணோமே?'' என்றது ஆட்டோ.

''ரொம்பச் சுவாரசியமான செய்திகளைக் கூறிக் கொண்டிருக்கிறாயே. நாங்கள் குறுக்கே புகுந்து கேள்வி கேட்க ஏதுமில்லையே? நாங்கள் பார்க்கும் இன்றைய கார் உருவாவதற்கு எத்தனை பேர் பாடுபட்டிருக்கிறார்கள்? அடேயப்பா...!'' என்றார்கள் ரமணியும் உஷாவும்.

''முக்கியமான கட்டத்துக்கே இன்னும் வந்தபாடில்லையே! இன்றையக் காரின் தோற்றத்தை உருவாக்கியவர்களில் இன்னும் பல பேருடைய உழைப்பு இருக்கிறது. ஆரம்ப நாட்களில் எனக்கு மூன்றே சக்கரங்கள் தான். யந்திரங்களெல்லாம் பின்னால் தான் இருக்கும்.

1885ம் ஆண்டு இளவேனிற் காலத்தின் பனிமூட்டம் கொண்ட அதிகாலை வேளை. பூமியெல்லாம் பனியாலும் சிறு தூறலாலும் ஒரே ஈரமாக இருந்தது. **கார்ல் பென்ஸ்** என்ற ஜெர்மானிய என்ஜினியரும் அவருடைய கூட்டாளி **மாக்ஸ் ரோஸ்** என்பவரும் தங்கள் தொழிற்கூடத்திலிருந்து ஒரு விநோதமான மூன்று சக்கர வண்டியை வெளியே தள்ளிக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். பென்ஸ் அந்த வண்டியின் பின்பக்கமிருந்த ஏதோ ஓர் உலோகப் பிடியைப் பிடித்து அசைத்தார். திடீரென்று பெரிய ஓசை எழுந்தது. அதைத் தொடர்ந்து 'டட் டட் டட்' என்ற சத்தம். அந்த யந்திரம் உயிர் பெற்றதற்கான அறிகுறி.


தன்னுடைய எண்ணெய் மண்டிய கைகளைத் துடைத்துக் கொண்டே, பென்ஸ் அந்த வண்டியில் தாவி ஏறி ஸ்டீயரிங் வீலின் முன்னால் அமர்ந்து கொண்டார். பிரேக்கைத் தளர்த்தினார். கமறலும் இருமலும் கொண்ட ஒலிகளிடையே சங்கிலிகள் அசையும் ஓசையோடு, குதிரைகள் பூட்டிய பெரிய வில் வண்டியின் சக்கரங்கள் உருள ஆரம்பிக்குமே அது போன்ற சத்தத்துடன் அந்த மூன்று சக்கர வண்டியின் பின் இரண்டு சக்கரங்களும் உருள ஆரம்பித்தன. முதலில் முக்கி முனகிக்குலுங்கினாலும் மெள்ள மெள்ள முன்னோக்கி நகரலாயிற்று அந்த வாகனம்.

கார்ல் பென்ஸின் முகத்தில் திருப்தி முறுவல் படர்ந்தது. ஸ்டீயரிங் வீலை உறுதியாகப் பற்றி வண்டியை இயக்கினார். எக்ஸாஸ்டிலிருந்து ஏராளமான எண்ணெய்ப் புகையை உமிழ்ந்து கொண்டே குறிப்பிட்ட தடத்தில் அந்த வண்டி ஓடலாயிற்று. முதல் மோட்டார் வண்டி ஓட ஆரம்பித்தது அப்போதுதான்.

பென்ஸின் தகப்பனார் ரயில்வே கம்பெனியின் ஊழியர். தாத்தா ஒரு கருமான். 1844ம் ஆண்டு நவம்பர் மாதம் 26ந் தேதி ஜெர்மனியில் பிறந்தவர் பென்ஸ். பாலங்கள் அமைக்கும் நிறுவனத்தில் பணியாற்றிய பென்ஸ் தமது இருபத்தெட்டாவது வயதில் அந்த வேலையை உதறிவிட்டுத் தமது அதிர்ஷ்டத்தைத் தேடித் துணிச்சலுடன் ஒரு தொழிற்சாலையை வாடகைக்குப் பேசிக் கொண்டு காஸ் என்ஜின்கள் செய்ய ஆரம்பித்தார். தமது முதல் என்ஜினை உருவாக்கி முடித்த போது பென்ஸுக்கு ஒரு பென்னிகூட இல்லாத நிலை ஏற்பட்டது.

தம் என்ஜினை வண்டியோடு இணைத்து ஓட்ட வைக்கும் முயற்சிக்கு முதல் வேண்டும். என்ன செய்வது? ஒரு கம்பெனியை உருவாக்கினார். பென்ஸுக்குப் பொருளுதவி செய்தவர்கள் ஸ்டேஷனரி யந்திரங்களுக்கு ஏற்ப என்ஜின்களைத் தயாரிக்க வற்புறுத்தினர். வண்டிகளை இழுக்கும் விதத்தில் என்ஜின்களைத் தயாரிப்பது முட்டாள்தனமான செயல் என்று வாதிட்டார்கள். ஆனால் பென்ஸ் அவர்கள் யோசனையை ஏற்கவில்லை. கூட்டாளிகளோடு சச்சரவு மூண்டது. பலன்? பென்ஸ் தமது பழைய ஓர்க் ஷாப்புக்கே திரும்ப வேண்டியதாயிற்று.

இந்தக் கட்டத்தில்தான் மாக்ஸ் ரோஸ் என்ற வியாபாரி பென்ஸுக்கு உதவ முன்வந்தார். இவருக்கு காஸ் என்ஜின்களைப் பற்றிக் கொஞ்சம் தெரியும். அது மட்டுமல்ல. பென்ஸின் ஆராய்ச்சிகளை ஏற்றுக் கொண்டு உதவும் உள்ளமும் ரோஸிடம் இருந்தது. அதன் பலன்தான் 1885ல் முதல் கார் உருவாகி ஓடலாயிற்று. தண்ணீரினால் குளிரக் கூடியதும் இண்டர்னல் கம்பஸ்சன் என்ஜினும் கொண்ட வண்டி பென்ஸினுடையது. பின் சக்கரங்கள் இரண்டு சங்கிலிகளால் இயங்கும் தன்மையுடையன. என்ஜினின் குதிரை வேகம் 2/3. மணிக்குப் பத்து மைல் போகக் கூடியது.''



தெரியுமா?

575. டாரகோனா (Taragona) அலெஸ்ஸாண்டிரியா (Alessandria) மாகாணங்கள் எந்த நாட்டில் உள்ளன?

576. ஹார்ஸ் மலைகள் (Horz Mountain) எங்குள்ளன?

577. எந்த விளையாட்டில் கோட்டைகள் பயன்படுகின்றன?

578. யுரேனியத்தை '235' என்று விஞ்ஞான உலகில் அழைக்கிறார்கள். காரணம் தெரியுமா?

579. 'அஸிடில்ஸாலிஸிலிக் (Acetylsalicylic) அமிலத்துக்கு சாதாரணமாக வழக்கில் உள்ள பெயர் என்ன?

580. உங்களுக்கு அகராதி பார்க்கத் தெரியுமில்லையா? யுபிக்விடஸ் (Ubiquitous) என்றால் என்ன என்று பாருங்களேன்.

581. ஆகாய விமானம் விமான தளத்திலிருந்து காற்று வீசும் திசையை நோக்கி மேலே எழும்பியது. இது சரியா தவறா?

582. பச்சோந்தி அதன் சூழ்நிலைக்கு ஏற்பத் தனது உடல் நிறத்தை மாற்றிக் கொள்ளும் குணமுடையது. இதுசரியா தவறா?

583. H. W. லாங்ஃபெல்லோ என்ற புகழ் பெற்ற ஆங்கிலக் கவிஞர் எழுதியது ஹியவாதா என்ற பாடல். சரியா?

584. ஈக்வெடாரின் தலைநகரம் எது?

585. ஸ்பைஸ் (Spice) தீவுகள் (வாசனைத் திரவியத் தீவுகள்) எங்குள்ளன?

586. பரப்பளவில் பெரியது கானடாவா? அமெரிக்காவா?

587. பீதியடைந்த தேரை, தன்னைக் காத்துக்கொள்ள என்ன செய்கிறது தெரியுமா?

588. லிரிக் (Lyric) என்றால் என்ன?

589. சூரியனிடமிருந்து ஒளி பூமியை வந்தடைய எத்தனை நேரமாகிறது?

590. சூரியனின் குறுக்களவு இங்குள்ளவைகளில் எதுவாக இருக்கும்? 342,000; 550,000; 864,000 மைல்கள்.

591. சிங்கங்களின் கூட்டத்துக்கு ஆங்கிலத்தில் ஒரு வார்த்தை உபயோகிக்கிறார்கள். அது என்ன என்று தெரியுமா?

592. லெக்ஸிகோ கிராஃபர் என்றால் யார்?

593. 'ஃபுட் ஃபால்ட்' என்ற சொல் எந்த விளையாட்டில் பயன்படுத்தப் படுகிறது?

594. வெடல் கடல் (Weddel Sea) எங்குள்ளது?

தெரியுமே!



575. டாரகோனா ஸ்பெயினிலும் அலெஸ்ஸாண்டிரியா இத்தாலியிலும். 576. ஜெர்மனியில். 577. செஸ் ஆட்டத்தில். 578. ஒரு மூலப் பொருளை அதிலுள்ள ப்ரோடான் நியூட்ரான் அணுக்களின் எண்ணிக்கையைக் கொண்டுதான் இனம் காணுவார்கள். 'யுரேனியம் 235' என்றால் அதில் 143 நியூட்ரின் அணுக்களும் 92 ப்ரோட்டான் அணுக்களும் உள்ளன என்று பொருள். 579. ஆஸ்பிரின். 580. எங்கும் நிறைந்துள்ளது. 581. சரி. 582. தவறு. 583. தவறு. லாங்பெல்லோ அமெரிக்கக் கவிஞர். 584. க்விட்டோ. 585. மலாய்த் தீவுக் கூட்டங்களுள் சில இந்தோனேசியத் தீவுகளை இப்பெயரால் அழைக்கின்றனர். 586. கானடா. 587. அதன் தோலில் உள்ள சுரப்பிகள் விஷமற்ற ஒரு திரவத்தை உற்பத்தி செய்கின்றன. இது மனிதர்களைப் பாதிக்காது. 588. பாடுவதற்காக எழுதப்படும் கவிதை. 589. 8 நிமிஷம் 20 விநாடிகள். 590. 8,64,000 மைல்கள். 591. ப்ரைட் (Pride). 592. அகராதி தயாரிப்பவர். 593. டென்னிஸ் ஆட்டத்தில். 594. அண்டார்டிகாவில்.

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெ நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: சதாசிவ

ஆண்,
ஆளப்பிறந்தவன்.
அவன் துணைவி,
அவனது இதயராணி.
பிள்ளைக் கனியமுது,
பேசும் பொற் சித்திரம்.

இல்லறத்தின்
சுவைக்களனில்
மலர்ந்தவை,
மபத்லால்
துணிமணிகள்!



மெஃப்ரின் எஸ்டர்காட் டெரோஸெல்

எளிய சாயல்களிலும்,
எடுப்பான வண்ணங்களிலும்,
பெருமித பிரிண்டுகளிலும்
'மெஃப்ரின்' 100% பாலியெஸ்டர்
சேலைகள், பாலியெஸ்டர்
இழைகலந்த காட்டன் சேலைகள்;
'மெஃப்ரின்' பாலியெஸ்டர்
இழைகலந்த உடுப்புத்
துணிகள் — இலேசான லான்கள்.
கோடை நிழல் படரும்
கேம்ப்ரிக்குகள், கோலாகல
நகை மிளிரும் பாப்ளின்கள்;
இன்னெளி மிளிரும்
வண்ணங்களிலே, வரிகளிலே,
கட்டங்களிலே 'எஸ்டர்காட்'
பாலியெஸ்டர் இழைகலந்த
காட்டன் சூட்டிங்குகள்; அதி
நவீனமான அரும்பெரும் அழகு
வண்ணங்களில், பிரிண்டுகளில்
'டெரோஸெல்' பாலியெஸ்டர்
இழைகலந்த காட்டன்
ஷர்ட்டிங்குகள்.


**மபத்லால்
க்ரூப்**

AIYARS-M.174 TM

REGISTERED NO. M. 9040

துரிதமாக. ஜாக்கிரதையாக. நிச்சயமாக.

ஓரிடத்திலிருந்து
மற்றொரு இடத்திற்கு
நேரிடை
பார்சல் சர்வீஸ்



எப்படி?

இப்போது இடையில் நிற்காதபடி ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்கு நேராக எங்கள் லாரிகளைச் செலுத்துகிறோம். இந்த துரித சர்வீஸை எங்கள் வாடிக்கையாளர்கள் பெரிதும் வரவேற்கின்றனர்.

ஏனெனில் இந்த முறையில் பார்சல்களை மேலும் துரிதமாக, ஜாக்கிரதையாகக் கொண்டு சேர்க்க முடிகிறது. இது போன்ற துரித சர்வீஸ்களை நாங்கள் மேலும் விரிவுபடுத்தி, பல நகரங்களை நேரிடையாக இணைத்து வருகிறோம்.

இந்த சர்வீஸை வியாபாரிகள் சமூகம் மிக மிக வரவேற்கிறது. ஏனெனில் வியாபாரத்திற்கான சாமான்களை ஜாக்கிரதையாக தடங்கலின்றி அடைவதால் அவர்கள் தேவையான அளவே ஸ்டாக் செய்கின்றனர். இதனால் அவர்கள் மூலதனத்தை அனாவசியமாக முடக்கத் தேவையில்லை.

இந்தச் சிறப்பான பணி ஸதர்ன் ரோட்வேஸினால் எப்படி முடிகிறதென்றால்:

- தனியார் துறையில் ஸதர்ன் ரோட்வேஸ் நிறுவனமே மிகவும் பெரிய ஸ்தாபனம்.
- அவர்கள் தங்களுக்குச் சொந்தமான லாரிகளையே இயக்குகிறார்கள்.
- அவர்களின் பயிற்சி பெற்ற ஊழியர்கள், லாரி ஸ்தாபனத்தின் ஒவ்வொரு இயக்கத்தையும் தனித்தனியே கண்காணிக்கின்றனர்.
- அவர்களின் டிரைவர்கள், உடலியலையும் உளவியலையும் பொருத்து நடத்தும் பரிசோதனைகள், மற்றும் தூரத்தைப் பற்றி மதிப்பிடும் பரிசோதனைகள், கண் கால்களிடை கச்சித ஒத்துழைப்புக்கான பரிசோதனைகள் ஆகியவற்றிற்கு உள்ளாகிய பிறகுதான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- 100 மைல்கட்கு ஒன்றுவீதம் ரிப்பேர் மற்றும் பராமரிப்புக்கான வசதிகொண்ட தொழில் பட்டறைகள் அமைத்திருக்கிறார்கள்.

தென் இந்தியா முழுமையிலும் சரக்குகளை புக் செய்யும் ஆபீஸ்கள் பரவி உள்ளதால் மக்களிடை ஸதர்ன் ரோட்வேஸ் பெருநம்பிக்கை பெற்றிருக்கிறது.

உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ் TVS

ஸதர்ன் ரோட்வேஸ்
பிரைவேட் லிமிடெட்
(இது ஒரு டிவிஎஸ்
ஸ்தாபனம்)
மதுரை

FDSSR-1712TMB